


# போராட்டம்

2013 பெப்ரவரி
மலர் 1 இதழ் 2
நன்கொடை: ரூபா 30/=



04 மக்களின் பிரச்சினைகளுக்கு மதவாதம் தீர்வாகுமா?

06 ரிஸானா நபீக் செய்யத்தவறியவை செய்ய வேண்டியவை ?

08-09 சம உரிமை இயக்கத்தின் யாழ் பயணத்தின் அனுபவ பகிர்வு


# நவ தாராளமய பகற்கொள்ளைக்கு எதிரான சக்திகள் போராட்டக்களத்தில்

**நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்த முயற்சித்து வரும் ராஜபக்ஷ ஆட்சி எதிர்காலத்தில் செயற்படுத்த தயாராகிவரும் மக்கள் விரோத மறுசீரமைப்புகளை தோற்படிப்பதற்காக, விரிவான போராட்ட மத்திய நிலையமொன்றை கட்டியெழுப்புவது குறித்து முன்னிலை சோசலிசக் கட்சி கவனம் செலுத்தி வருகிறது. நீரை வர்த்தகப் பொருளாக்குவதற்கும், விதைகள் மற்றும் விவசாயப் பொருட்களை முற்றாக பல்தேசியக் கம்பனிகளிடம் ஒப்படைப்பதற்காக தயாரிக்கப்படும் புதிய சட்டங்களுக்கு எதிராகவும் விவசாய மக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறார்கள்.**

கல்வியை வர்த்தகப் பொருளாக்குவதற்கும், அதன் நிதிச் சுமையை மக்கள் மீது சுமத்துவதையும் நோக்கமாகக் கொண்டு சட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதனை எதிர்த்து மாணவர்கள் இப்போதே களத்தில் குதிக்க தயாராகி வருகின்றனர்.

மிகச் சிறந்ததொரு சேவை நிபந்தனைக்காக தொழிலாளர் அமைப்புகளில் எழுச்சி பெற்றுவரும் போராட்டங்கள் மற்றும் இந்த அனைத்து போராட்டங்களையும் ஓரணியில் திரட்டும் விரிவான போராட்ட மத்திய நிலையத்தை கட்டியெழுப்பி, அந்த அனைத்து போராட்டங்களையும் மறுசீரமைப்புவாதத்திற்கும் அப்பால் வளர்ச்சியடையச் செய்து, நவ தாராளமய முதலாளியத்திற்கு எதிரான போரட்டத்தின் பக்கம் இணைப்பது இச்சந்தர்ப்பத்தில் இன்றியமையாததாகும் என முன்னிலை சோசலிசக் கட்சி கூறுகிறது.

தமது துறைகளில் செயற்பட்டுவரும் நவ தாராளமய மறுசீரமைப்புகளுக்கும், அதற்கு வசதி வாய்ப்புகளை வழங்குவதற்காக சமீபகாலமாக அரசாங்கம் கொண்டு வந்த அடக்கு முறை சட்ட திட்டங்களுக்கு எதிரான போராட்டம் சம்பந்தமாக போர்க்குணம் கொண்ட சக்திகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளோடு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் கட்சி செய்திகள் கூறுகின்றன.

## 48 மணிநேரம் தடுத்துவைக்கும் குற்றவியல் சட்டமூலத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!




பிடியாணையின்றி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் 48 மணித்தியாலங்கள் தடுத்துவைக்கலாம் என்ற குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை சட்டமூலத்திற்கு எதிராக 2013.01.22 அன்று இடதுசாரி கட்சிகளினால் கொழும்பு புறக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## தடைகளுக்கும், இடையூறுகளுக்கும் மத்தியில் சம உரிமை இயக்கம் தனது கடமைகளை செய்கிறது

**சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டாளர் - ரவீந்திர முதலிகே**

அரசாங்கமும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் இனவாதக் கும்பலும் எந்தளவுதான் இடையூறகள் செய்தாலும், ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் பேதங்களை உண்டாக்குவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்தை அஞ்சாமல் முன்னெடுத்துச் செல்வதாக சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டாளர் தோழர் ரவீந்திர முதலிகே கூறுகிறார்.

ஆட்சியாளர்களின் பூரண ஆசீர்வாதத்தோடு சில பொம்மலாட்டக்காரர்களை பயன்படுத்தி இனவாதத்தையும் மதவாதத்தையும் நாட்டில் வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை தோற்படிப்பது அனைத்து முற்போக்குவாதிகளினதும் கடமையாகுமெனவும், அந்த கடமைக்காக சம உரிமை இயக்கம் முன்வருவதை யாராலும் தடுக்க முடியாதெனவும் தோழர் ரவீந்திர முதலிகே மேலும் கூறினார்.

யாழப்பாணத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு வற்புறுத்தியும், வடக்கில் நடாத்திவரும் இராணுவ ஆட்சிக்கு எதிர்பு தெரிவிக்கும் விதத்தில் பதாதையொன்றில் கையெழுத்து பெற்றுக் கொள்ளும் நிகழ்வு ஜனவரி 15ம் திகதி நடைபெற்ற வேளையில் அதன் மீது இராணுவக் குழுக்கள் தாக்குதலொன்றை நடாத்தினார்கள். சம உரிமை இயக்கத்தின் தலைவர்கள் பயணித்த வாகனமும் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. ஜனவரி 31ம் திகதி சிங்கள - முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தை வளர்க்கும் சூழ்ச்சியை பகிரங்கப்படுத்தும் துண்டுப் பிரசுமொன்று நாடு பூராகவும் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, மாவனல்லையில் பொலிஸாரின் இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பெப்: 6ம் திகதி "ஏனிந்த குழப்பம்- முஸ்லிம் சிங்களம்" என்ற தொனிப்பொருளில் கம்பளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சம உரிமை இயக்கத்தின் கருத்தரங்கிற்கு அரசாங்க பங்காளிக் கட்சியான தேசிய ஹெல உருமய கட்சியின் இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் உருவானது, இப்படியான எத்தனை இடையூறுகள் வந்தாலும் தமது முயற்சியை கைவிடப் போவதில்லையென சம உரிமை இயக்கம் கூறுகிறது.

## மகளிர் தினத்திற்காக நாடு பூராவும் பல்வேறு நிகழ்ச்சிகள்

மகளிர் மத்தியில் கருத்தாடலொன்றை உருவாக்குவதற்கான பல்வேறு நிகழ்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், மார்ச் 1ம் திகதியிலிருந்து 5ம் திகதி வரை இந்த நிகழ்ச்சிகளை நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடாத்துவுள்ளதாகவும் சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திமுது ஆடிகல தெரிவித்தார். இதன்போது, கலை நிகழ்ச்சிகள், மற்றும் பெண்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கருத்தாடல்கள் மற்றும் அது சம்பந்தமான வீடியோ விவரணப் படம் காண்பிக்கப்படவிருக்கின்றது.

மார்ச் 8ம் திகதி மகளிர் தினத்தன்று பெண்ணுரிமை குறித்து நடைபயணமொன்றும், கருத்தரங்கொன்றும் நடைபெறவிருப்பதாக சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பு தெரிவித்துள்ளது. இம்முறை மகளிர் தின நினைவு கூறலின்போது, ஒடுக்கப்பட்ட பெண்கள் மத்தியில் சமூக மட்டத்திலான செயற்பாடொன்றை கட்டியெழுப்புவதற்கு முக்கியத்துமளிக்கப்படுமெனவும் எமது கேள்வியொன்றுக்கு பதிலளித்த திமுது ஆடிகல மேலும் கூறினார்.



# இனவாதத்திற்கு எதிரான இனஐக்கியம்

**"இனவாத அரசியலாளர்கள் நாட்டு மக்களுக்கு நாட்டின் உண்மை நிலைகளை (அரசியல்-பொருளாதார-வேலையில்லா-வெளிநாட்டு-உள்நாட்டுக்கடன்., இதனுடன் பின்னிப்பிணைந்த ஏனையவைகள்) உள்ளவாறு சொல்ல முற்படமாட்டார்கள்."**

இன்று எமது நாடு இனவாததின் காலபோகத்தில் உள்ளது. கடந்த அரைநூற்றாண்டு காலமாக விதைக்கப்பட்ட இனவாத அரசியலின் விளைச்சலை இன்று எம்நாட்டு மக்கள் அறுவடை செய்து கொண்டிருக்கின்றார்கள். சிங்களப் பேரினவாதமும், சிறுபான்மையினரிடையே உள்ள தமிழ்த்தேசிய இனவாதமும்தான் எம் நாட்டுமக்களின் "இனவாத வித்தாகும்".

சுதந்திரத்திற்கு முன்பாகவே இனவாத அரசியல் முளைவிட ஆரம்பித்தாலும், சுதந்திரத்தின்பின் மாறிமாறி வந்த இனவாத அரசுகளின் வினையாற்றல்கள்தான் சிறுபான்மையினரிடையே இனவாதமாக தோற்றம் பெற்றது. இதை மலையக மக்களின் குடியுரிமை இல்லாதாக்கப்பட்டதுடனும், தனிச் சிங்களச சட்டத்தின் வருகை கொண்டும் காணமுடியும்.

"சிங்கள மக்கள் மத்தியில் தென்னிந்தியா பற்றிய அச்சங்கள் நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன. தமிழர்கள் என்றாலே தென்னிந்தியர்கள்தான் எனவும், இப்பார்வை கொண்ட, தென்னிந்தியப் படையெடுப்புக்கள் மூலம் நடைபெற்ற பாதிப்பான சம்பவங்களை சிங்கள மாணவர்கள் இன்றும் சரித்திரமாகவே பாடசாலைகளில் படிக்கின்றார்கள்." ஆகவே சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இந்த அச்ச அரசியலை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியே யூ.என்.பி.யும் டி.எஸ். சேனநாயக்காவும் மலையக மக்களின் குடியுரிமையை பறித்தார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதை இலங்கையில் பல நடுநிலையான இனவாதமற்ற வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளார்கள். மனிதனது பலவீனங்களை ஆளும் வர்க்கங்கள் தமக்கு சாதகமாக பாவிப்பர். இன-உணர்வானது மனிதர்களை வேறுபடுத்தவும், ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றுபடாமல் தடுக்கவும், பயன்படுத்தப்படும் என்பதை இந்நடவடிக்கைகள் கொண்டு நாம் காணமுடியும்.

அடுத்து தனிச்சிங்கள சட்ட மசோதாவின் வருகைக்கும் சிற்சில வரலாற்றுக் காரணிகளும் உண்டு.பிரித்தானிய ஆட்சியின் கீழ் மதமாற்றத்தைக் கருத்தில் கொண்டு கிறிஸ்தவ-கத்தோலிக்க பாடசாலைகள், அமெரிக்க மிசனரி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் ஆங்கிலம் கற்கும் வசதியும், அதில் தேர்ச்சி பெற்றவர்கள் உயர் அரச உத்தியோகங்களை பெறும் வாய்ப்பும் பெருமளவாகின. கிறிஸ்தவ நிறுவனங்கள் மத மாற்றத்தை இலக்காகக் கொண்ட போதிலும், நாளாவட்டத்தில் உயர் வர்க்க பௌத்த-இந்துவத்தின் நல்லுறவைப் பேணுவதில் கவனம் செலுத்தின.

நல்லுறவின் நிமித்தம் அமெரிக்க மிசனரிப் பாடசாலைகளில் வருகை கொழும்பு தவிர்ந்த ஏனைய மாகாணங்களை விட, வடக்கில் எண்ணிக்கையில் பெருமளவானது. இதனூடாக இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட யாழ்ப்பாணம் ஆங்கிலக் கல்வியை கற்கும் வசதியை பெறலாயிற்று. இக்காலத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து படித்த சிங்கள புத்திஜீவிகளும், சிங்கள அரசியல்வாதிகளும் கணிசமானோர் உளர். அத்துடன் இப்பாடசாலைகளில் யாழின் உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆங்கிலக் கல்வியை கற்கும் பெறுபேறைப் பெற்றனர். தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகள் இம்மிசனரிப் பாடசாலைகளில் கல்வி கற்க முடியாது என்றொரு பாகுபாடான நிலையையும், தமிழ் மக்கள் மத்தியில் "இருவிதமான தமிழர்கள்" உள்ளனர் என்பதையும் நாம் இவ்விடத்தில் கண்டு கொள்ளவேண்டும். இதில் பிரித்தானிய ஆட்சியினரின் பிரித்தாளும் நடவடிக்கையும் கண்டு கொள்ளமுடியும்.

இவ்வாறான "விசேட" பாகுபாடு கொண்ட ஆங்கிலக் கல்வியூட்டல் நடைமுறை மூலம் கல்வி கற்ற "உயர்-இந்து, உயர் சமூகத்தின் நடுத்தரவர்க்கம்" பிரிட்டிஸ் ஆட்சியின் சகல அரசாங்க செயற்பாட்டகங்களிலும், சகல அரசாங்க-கூட்டுத்தாபனங்களிலும் உயர்-பதவிகள் முதல், சாதாரண பதவிகள் வரை பதவிகளை வகித்தனர். இவ்உயர்-சாதாரண பதவி வகிப்புகள் மலையகத்தையும் விட்டுவைக்கவில்லை. தவிரவும், மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சீதோஸன நிலையாலும, அதன் பொருளாதாரம் கடும் உழைப்புடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்த காரணத்தாலுமே (ஆங்கிலக் கல்வியைக் கற்றதொரு பெரும் கூட்டம்) இச்சூழ்நிலை உருவாகியது. என்ற உண்மையையும் நாம் மனம் கொள்ளவேண்டும். அத்துடன் இக்காரணிகளாலேயே பிரிட்டிஸ் ஆட்சியினரால் ஊக்குவிக்கப்பட்ட இன்னொரு நடவடிக்கையான சிறுவியாபார ஊக்குவிப்பாலும், குடாநாட்டின் பெரும்பாலானோர் வடக்கைவிட இலங்கையின் ஏனைய மாகாணங்களின் பெரு-சிறு வியாபாரநிலையங்களை வியாபித்தனர்.

**"தனிச்சிங்கள சட்டம் வரும்வரையும், அது இனக்கலவரமாக மாறும்வரையும் சிங்கள மக்கள் மத்தியில் எவ்வித பகைமை உணர்வையும் ஏற்படுத்த வழிகோலவில்லை."**

யாழ்ப்பாணத் தமிழர்கள் அரசாங்க உயர்-சிறு உத்தியோகங்களிலும், சிங்களப் பிரதேசங்களில் நடாத்திய பெரு-சிறுவியாபரங்களிலும் செலுத்திய செல்வாக்குகள், அதனுடன்கூடிய மென்போக்கு நடவடிக்கைகள் யாவும் தனிச்சிங்கள சட்டம் வரும்வரையும், அது இனக்கலவரமாக மாறும்வரையும் சிங்கள மக்கள் மத்தியில் எவ்வித பகைமை உணர்வையும் ஏற்படுத்த வழிகோலவில்லை. எனவே இப்பகையுணர்வானது பண்டாரநாயக்காவின் இனவாத அரசியல் கொண்ட பாராளுமன்ற பிரவேசத்திற்கு ஊடாகவே ஊட்டம்பெறுகின்றது. பண்டாரநாயக்காவின் அரசியல் பிறப்பிடம் இனவாத யூ.என்.பி.யே ஆகும். அக்கட்சி இலங்கையில் சிங்களமே ஆட்சி மொழியாக ஆகவேண்டுமென களனி மாநாட்டில் தீர்மானம் எடுத்த பொழுதும் அதனுடனேயே இருந்தவர். 56-ல் அதிலிருந்து பிரிந்த பொழுது, யூ.என்.பி யின் அடிப்படைக் கொள்கையை (தனிச்சிங்களத்தை) தானே தத்தெடுத்துச் சென்று அதை இனவாத அரசிலாக்கி, தன் பாராளுமன்ற வெற்றியை பெற்றெடுக்கின்றார்.

இனவாத அரசியலாளர்கள் நாட்டு மக்களுக்கு நாட்டின் உண்மை நிலைகளை (அரசியல்-பொருளாதார-வேலையில்லா-வெளிநாட்டு-உள்நாட்டுக்கடன்., இதனுடன் பின்னிப்பிணைந்த ஏனையவைகள்) உள்ளவாறு சொல்ல முற்படமாட்டார்கள். சொல்லமுற்பட்டால, மக்கள் இவர்களை இல்லாதாக்கிவிடுவார்கள். அதற்காக தங்கள் அரசியலை தொடர, பொய்களால் உண்மைகளை மூடிமறைக்கவே முற்படுவர். தவிரவும் தொடர் இனவாத அரசியல் கொண்டு பிழைக்கவும், அதைத் தொடரவும் சாதிய-இன-மத-மொழிப் பிரச்சினைகளை மக்களின் பிரதான முரண்பாடுகளாக்கி, மக்களை தங்களுக்குள் மோதவிடுவர்.

இந்நிலையில் மேற்சொன்னவைகளை தமக்குச் சாதகமாக பயன்படுத்துவதில் தமிழ் இனவாதத் தேசியமும், சிங்களப் பேரினவாதத்திற்கு சளைத்தவர்கள் அல்லர். சிங்கள இனவாதத்தை தமிழ் மக்களுக்கு இலகுவாக இனம் காட்டும் இவர்கள, தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இனவாதங்களையும் இதில் தங்களுக்கு உள்ள "போரினவாத"ப் பாத்திரத்தையும் பூசிமெழுகியபடி, மிகத்தந்திரமாகவே தம் இனவாத அரசியலை செய்து வருகின்றனர். இதில் இவர்களின் "பேரினவாத" அரசியல் திமிரை மலையக-முஸ்லிம் மக்களிற்கான அரசியல் செயற்பாட்டிற்கு ஊடாகவும், அம்மக்களின் அபிலாஷைகளை மிக இலேசாக நிராகரிக்கும் தன்மைகளுக்கு ஊடாகவும் காணமுடியும். அத்தோடு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தாழ்த்தபட்ட மக்களை அடக்கி-ஒடுக்கி நடாத்தும் அடிமை அரசியலுக்கு ஊடாகவும் காணமுடியும்.

இங்கு ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், தமிழ் இனவாதத் தேசியம் எப்பொழுதும் தமிழ் மக்களது பிரச்சினைகளை இனவாத உணர்வலைகளுக்கு ஊடாக கிளர்ந்தெழவைக்கும். அதேவேளை தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை சாதாரண சிங்கள மக்களுக்கும், சிங்கள முற்போக்கு சக்திகளுக்கும் எடுத்துச் செல்லாமலும், சொல்லாமலும் திட்டமிட்டு தனிமைப்படுத்தி அந்நியமாக்கும்.

இவ்வகையில்சிங்கள-தமிழ் இனவாதிகள் எனப்படுவோர் ஏகப்பெரும்பான்மையான சாதாரண மக்களின் நலன்களுக்கு எதிரான பிரதான எதிரிகள் ஆவர். இவர்களின் ஆதிக்கத்தில் இருந்து இலங்கையின் அரசியல் விடுவிக்கப்பட வேண்டும். சமூக விஞ்ஞானக் கண்ணோட்ட நோக்கில் எம் நாட்டின் சாதாரண சிங்கள-தமிழ் மக்கள் இனவாதிகள் அல்லர். சிலவேளைகளில் சமூக நெருக்கடிகளின்போது, இனவாதத்திற்கு ஆட்படுகின்றனர். ஆனால் தாங்கள் இனவாதத்திற்குள் ஆட்படுவதற்கான தாரத்பரியங்களைக் கண்டறிந்தால், இனவாதத்தையும், அதற்கான இருப்பையும் இல்லாதாக்குவார்கள். ஏனெனில் எம்மக்களே எம்நாட்டு வரலாற்றின் உந்துசக்தி!

# குற்றவியல் விசாசணை, அமைச்சரவை மீளமைப்பு மற்றும் மரணப் பொறி





பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயகவிற்கு எதிராக சமரப்பிக்கப்பட்டிருந்த குற்றவியல் விசாரணையோடு உச்சத்திற்கு வந்த போராட்டம் மெதுவாக தணிந்து விட்டிருக்கின்றது. ஜனவரி 11ம் திதி பிற்பகல் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் அன்று இருவோடு இரவாக ஜனாதிபதிய-டம் ஒப்படைக்கப்பட்டது பின்னர் ஜனாதிபதியால் ஒப்பமிடப்பட்டு ஜனவரி 13ம் திகதி சிராணி பண்டாரநாயகவிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அதன் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் ஜனவரி 15ம் திகதி ஆரம்பமாகின. அன்றைய தினம் தொடர்ந்தும் தான் பிரதம நீதியரசராக இருப்பதாகக் கூறி நீமிமன்ற நடவடிக்கைகளில் சிராணி பண்டாரநாயக ஈடுபடுவார் என்ற வதந்தி பரவியிருந்தது. அன்றைய தினம் புதுக்கடை உச்ச நீதிமன்ற வளாகத்தில் ஆயுதமேந்திய இராணுவத்தினரும் பே-ாலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் அன்றைய தினம் பகல் திரு மொஹான் பீரிஸ் இலங்கையின் 44வது பிரதம நீதியரசராக சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டார். முன்னால் பிரதம நீதியரசர் பிற்கல் 5.30 அளவில் தனது உத்தியோக இல்லத்திலிருந்து வெளியேறினார். ஜனவரி 28ம் திகதி அமைச்சரவை மாற்றம் நடபெற்றது. 10 அமைச்சர்களும் 2 திட்டமிடல் அமைச்சர்களும் 6 பிரதி அமைச்சர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள். இதோடு அமைச்சரவையின் எண்ணிக்கை 65க அதிகரிக்கப்பட்டது. அனுர யாப்பாவிற்கு எரிபொருள், சுசிலுக்கு சுற்றாடல், சம்பிகவிற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம். பவித்ராவிற்கு மின்சாரம் மற்றும் மின்வலு என்ற வகையில் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதற்கிடையில் லக்ஸ்மன செனவிரத்னவிற்கு சீனி அமைச்சர் பதவியும் கிடைத்தது. எறும்புக்கும் ஒரு அமைச்சர் நியமிக்கப்படாததுதான் குறை. அமைச்சரவையின் மமாற்றம், தனது எதிராளிகளை பழிவாங்குவதற்கும் அடிமைத்தனத்தை வெளிக்காட்டுவதற்கும் பதவிகள் மற்றும் வரப்பிரசாங்களை வழங்கும் மேடைக் காட்சியாகவே இருந்தது.

முன்னால் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயவை பதவியிலிருந்து விரட்டும் நடவடிக்கை முடிவுக்கு வந்ததோடு அமைச்சரவை மாற்றத்திற்கான வேலைகள் ஆரம்பாமாயின. சிராணியை பழி வாங்கியதில் அரசாங்கம் வெற்றி பெற்றதாக மேலோட்டமாக தெரிந்தாலும், பண்பாட்டு ரீதியில் அரசாங்கம் தோல்விடடைந்துள்ளது. அரசாங்கத்தின் தீர்மானம் பழி வாங்கும் நோக்கத்திலேயே மேற்கொள்ப்பட்டதில் சந்தேகம் கிடையாது. அதனை தர்க்க ரீதியினாலும், புத்திசாலித்தனத்தினாலும் மறைக்க முடியாது. சமூகத்தில் நவ தாராளமய கொடுமையை நியாயப்படுத்துவதும் அந்த நியாயப்படுத்தலுக்குள் உருவான மௌனமுமே அரசாங்கம் தனது இருப்பை தக்கவைத்துக் கொண்டிருப்பதற்கு காரணம். சர்வாதிகாரத்தின் "கேக்"கை அலங்கரிப்பதைத் தவிர வேறு மாற்று கிடையாது என்று ராஜபக்ஸ ாக்கள் சிராணி பண்டாரநாயக உள்ளிட்ட அனைத்து அரச உயரதிகாரிகளுக்கும் கூறுகிறார்கள். ராஜபக்ஸாக்கம் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் தன்னிச்சையான செயல்களுக்காக வாலை ஆட்டுவதற்கும் அடிமைத்தனத்தை வெளிக்காட்டுவதற்கும் விருப்பமில்லாதவர்கள் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பது அமைச்சர்களின் நியமணத்தைப் பார்க்கும் போது தெரிகிறது.


அடிக்கடி அமைச்சர்களை மாற்றுவதுதான் இவ்வாறான சர்வாதகாரங்களின் இயல்பாக இருக்கின்றது. இன்றைய நிலை-லயில் பொனபொட்வாத ஆட்சியில் ஒட்டுமொத்த அரச அதிகாரமும் ஒரு குடும்பத்தின் கைகளிலே-யே இருக்கின்றது. அனைத்து அமைச்சுக்களையும் வழிநடத்தும் சுக்கான் அவர்களது கைகளி-லேயே இருக்கிறது. அமைச்சர்கள் என்போர் வெறும் பெயர் தாங்கிகள் மட்டுமே. ஆகவே தர்க்க ரீ-தியில் அமைச்சுக்களுக்கான பொறுப்புக்களை ஒதுக்குவதோ அல்லது அமைச்சுக்களுக்கு தகுதியான நபர்களை அமைச்சர்களாக நியமிப்பதோ தேவையற்ற விடயம். சர்வாதிகாரத்தின் ஆளும் கும்பல் அனைத்து துறைகளையும் வழிநடத்திக் கொண்டிருக்கின்றது. சர்வாதத்தின் அடிவருடிகளுக்குத்தான் அமைச்சுப் பதவிகள் தேவைப்படுகின்றன. ஆலவட்டம் வீசுடே-வாரை அமைச்சர்களாக்கி அவர்களை உல்லாசத்தில் மூழ்க வைத்துவிட்டு தான்தோன்றித்தனமாக நாட்டை ஆள்வதே சர்வாதிகாரத்தின் தேவையாக இருக்கின்றது. அடிவருடிகளாக இருக்க விருப்பாதவர்களை பழி வாங்குவதற்கும். ஒரு அமைச்சுப் பொறுப்பில் ஒரே நபர் நீடித்திருப்பதால் அவரது தனித்துவம் கட்டியெழுப்பப்படுவதற்கு இடமிருப்பதாலும் அமைச்சுப் பதவ-ிகளில் அடிக்கடி மாற்றம் வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இம்முறை அமைச்சரவை மாற்றம் அதனை வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருக்கின்றது. அனைத்து சாரங்களையும் ராஜபக்ஸாக்கள் உறிஞ்சிவிடுகிறார்கள். இப்படியான ஜனநாயகத்தில் யாராவது இதுதான் என்னுடைய கருத்து என்று கூற முடியாது. தன்னுடையது என்று சொல்லக் கூடிய கருத்தோ கோட்பாடோ இருக்க முடியாது. ராஜபக்ஸாக்களின் கருத்தை கிளிப்பிள்ளைகளைப் போன்று உச்சரிக்கும் அடிமைகள்தான் தேவைப்படுகிறார்கள். சம்பிக ரணவகவிடமிருந்து மின்சாரம் மற்றும் மின்வலு அமைச்சை எடுத்துவிட்டு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. ( நாங்கள் உடன்படாவிட்டாலும்) அவருக்கென்று தனிப்பட்ட கருத்து இருந்தமைதான் காரணம். மஹிந்த உள்ளிட்ட ராஜபக்ஸ ாக்கள் சொல்லும் கருத்துக்களை தவிர வேறு எந்தக் கருத்தையும் கூற முடியாதென்பதை மின்சாரம் மற்றும் மின்வலு துறையிலான பல்வேறு திட்டங்களை முன்வைக்கும் சம்பிக ரணவகவிற்கும், குற்றவியல் விசாரணையின்போது அதற்கு ஆதரவாக கையைத் தூக்காமல் ஒதுங்கியிருந்த திஸ்ஸ விதாரணவிற்கும் ஏற்பட்ட நிலையிலிந்து அதனை அறிந்துக் கொள்ள முடியும். பொனபொட்வாத ஏகாதிபத்திய "கேக்"கை அலங்கரிப்பதுதான் அரசாங்கத்திற்குள் புகுந்துக் கொண்டிருக்கும் அனை-வரினதும் தலைவிதியாக இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது கொடிய சர்வாதிகார அரசொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மாத்திரம் இப்போதைக்கு ˙.எங்களால் குறிப்பிட முடியும்.

> **"ஒன்றுக்கும் உதவாத எலும்புத் துண்டை பங்கிட்டுக் கொள்வதற்கு ஏனையவர்களுக்கு உள்ள உரிமையைத்தான் அவர்கள் ஜனநாயம் என்று சொல்கிறார்கள்."**

இலங்கையைப் போன்ற பின்தங்கிய நாடொன்றில் நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டத்தை செயற்படுத்துவதற்கு தயாராகும் ஆட்சியாளர்களுக்கு ராஜபக்ஸாக்களின் தனிப்பட்ட கருத்துக்கள் பிரச்சினையாக இருப்பதில்லை. நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துக் கொள்வதற்கான நீண்டகால திட்டமொன்று அரசாங்கத்திற்கு இருக்கின்றது. ஜனரல பத்திரிகையின் செய்திக்கு ஏற்ப மாகாண எல்லைகளை மாற்றி அமைக்காமல் முழு இலங்கையையும் 5 மாகாணங்களாக பிரிப்பது அந்த திட்டத்தின் ஒரு அங்கமாகும். பிரதேச சபை தேர்தல்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ள வாக்களிப்பு முறை அதில் இன்னொரு அங்கமாகும். வாழ்வின் எழுச்சி போன்ற(திவிநெகும) சட்டங்களைப் போன்றே குற்றவியல் வழக்கு கோடை-வயில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குவதை தடை செய்யும் உடன்பாட்டு சட்டத்தில் மேற்கொள்ளப்படவிருந்த தித்தங்கள் போன்ற அடக்கு முறை சட்டதிட்டங்கள் அதன் இன்னொரு பகுதியாகும். இதற்கிடையில் 19வது அரசிலமைப்பு திருத்தம் சம்பந்தமாக அமைச்சர் கெஹெலிக ரம்புக்வெல சொல்லும்போதும், 1978 அரசியலமைப்புக்குப் பதில-ாக புதிய அரசயலமைப்பை கொண்டுவர வேண்டுமென்று ஜனாதிபதி சொல்லும்போதும் அவை அடக்குமுறைக்கான திருத்தங்களேயல்லாது விடுதலை-லயை பெற்றுத் தரக்கூடியவை என்று யாராலும் நம்ப முடியாது. அந்த அரசியலமைப்பு பொறிகள் அனைத்தும் கொழும்பு நகரத்திலிருந்து ஏழைகளை வெளியேற்றுதல், நாட்டின் குடிசன பரவல் மாற்றமடையக் கூடிய விதமாக மேற்கொள்ளப்படும் பார-ியளவிலான குடியேற்றங்கள், பே-ாலி நகர அலங்கரிப்பு திட்டங்கள், பாரிய அபிவிருத்திக் கண்காட்சிகள் போன்றவை நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்துவதற்கான நீண்டகால திட்டத்தின் பகுதிகளாகும். இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திக்கு எதிராக போராடிய சக்திகள் தமது போராட்டங்கள் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. சில காலத்திற்கு முன்னர் சரத் பொன்சேகாவை தோளில் சுமந்துக் கொண்டு தமது அதிகார நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயன்றதைப் போன்று, இப்போது சிராணி பண்டாரநாயக ஊடாக அரசியல்

தொடர்ச்சி 14ம் பக்கம்



# சிங்கள மக்களின் பிரச்சினைக்கு மதவாதம் தீர்வாகுமா?

இலங்கையில் நூற்றாண்டு காலமாக சிங்கள- முஸ்லிம் மக்களுக்கிடையே நிலவி வந்த நல்லுறவிற்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் கடும்போக்கு பௌத்த குழுக்களினால் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எதிராக அவதூறான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கின்றது. ஒற்றுமையாக சகோதரத்துவ மனப்பாங்குடன் வாழ்ந்த சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் இனவாதத்தை தூண்டியதன் காரணமாக நாட்டை பிணக்காடாக்கிய யுத்தம் மூன்று தசாப்தங்களாக நடந்தது. அதன் காரணமாக இந்த நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் இன, மத வேறுபாடின்றி சாகடிக்கப்பட்டார்கள். யுத்தம் முடிவுற்று அதன் வடுக்கள் ஆறுவதற்கு முன்பாகவே முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் மத்தியில் குரோதத்தை வளர்த்து இன்னொரு இனவாத யுத்தத்திற்குள் நாட்டு மக்களை இழுத்து வீசுவதற்கு அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் செயற்பட்டு வரும் பௌத்த இனவாத கும்பல் தயாராகி வருவது தெரிகின்றது. இனவாதத்தையும் மதவாதத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் விதைத்து வரும் இந்த விஷமிகளுக்கு ஆதரவாக, தங்களை நடுநிலையாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சில ஊடகங்கள் கூட இன்று மதவாதக் குட்டையில் குளித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நச்சுப் பாம்புகள் ஊதும் மகுடிக்கு ஏற்றபடி ஆடும் சிங்கள பௌத்த இனவாதிகள் முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாமென சுவரொட்டிகள் மூலமாகவும் வாய்ச்சொல் மூலமாகவும் அருவருக்கத்த பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்ளு.


இந்தியாவில் மதவெறியை தூண்டி இந்திய மக்கள் சமூகத்தின் மத்தியிலிருந்த தேசிய ஒற்றுமைக்கு பங்கம் விளைவித்த ராஷ்ட்ரிய சிவ சேனா (ஆர்.எஸ்.எஸ்.) போன்ற அமைப்புகள் ஆரம்பத்தில் முஸ்லிம் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாம் என்று பிரச்சாரம் செய்து, அதன் உச்சக் கட்டமாக குஜராத்தில் 2500க்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டார்கள். முஸ்லிம் பெண்களும் சிறுமிகளும் கொடூரமாக கற்பழிக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். இன்று பொது பல சேனா என்ற மதவாத பயங்கரவாதிகளின் செயல்களைப் பார்க்கும் போது இலங்கையிலும் அவ்வாறானதொரு கொடுமை எதிர்காலத்தில் நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சம் முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கின்றது. .

1915ல் காலனித்துவ குள்ள நரிகளால் தூண்டப்பட்ட சிங்கள முஸ்லிம் இனக்கலவரத்துக்குப் பின்னர் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு சிங்கள முஸ்லிம் கலவரங்கள் நடந்ததாகத் தெரியவில்லை. ஆங்காங்கே சில பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக சில பிரச்சினைகள் நடந்தாலும் காதல் மற்றும் வியாபாரம் சம்பந்தமான பிரச்சினைகளை மையமாகக் கொண்டே அவை நடந்துள்ளன. பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக முதலாளித்துவ அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக மதவாதத்துக்கு தூபமிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. 70 - 76 களில் அப்போதைய கல்வியமைச்சராக இருந்த பதியுத்தீன் மஹ்மூத், அவரது அமைச்சுக்குள் வைத்து, ஊவாவின் பொடி புதா என்றழைக்கப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் எட்வின் விக்ரமரத்தின என்பவரால் தாக்கப்பட்டார். அப்போது இனவாத வார்த்தைகளும் பிரயோகிப்பட்டதாகக் கூறப்பட்டது. இதனை அன்றைய சிங்களப் பத்திரிகையான "தினமின" தலைப்புச் செய்தியாக படங்களுடன் வெளியிட்டிருந்தது. மறுநாள் தனது தேர்தல் தொகுதிக்கு வந்த எட்வின் விக்கிரமரத்தினவை தொகுதி மக்கள் மாவீரனை வரவேற்பதைப் போன்று வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அவர் தாக்கியது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கல்வியமைச்சரை. அவர் ஒரு முஸ்லிம். அதுதான் காரணம். அதன் பின்னர் முஸ்லிம்களுக்கெதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. மகியங்கனை பௌத்த விகாரையை அண்டியிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு முஸ்லிம்கள் அங்கிருந்து விரட்டப்பட்டார்கள். அப்போது ஆட்சியிலிருந்தது சிறிமாவோ பண்டாரநாயக தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம். தங்களை சோஷலிஸவாதிகள் என்று காட்டிக்கொண்ட இலங்கை சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்க் கட்சியும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருந்தமையும், பிரபல முஸ்லிம் முதலாளித்துவ தலைவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தமையையும் குறிப்பிட வேண்டும்.

> **"1915ல் காலனித்துவ குள்ள நரிகளால் தூண்டப்பட்ட சிங்கள முஸ்லிம் இனக்கலவரத்துக்குப் பின்னர் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு சிங்கள முஸ்லிம் கலவரங்கள் நடந்ததாகத் தெரியவில்லை"**

1977ல் ஜுனியஸ் ரிசட் ஜயவர்தனவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களினதும் அமோக ஆதரவோடு முடிசூடா மன்னனாக ஆட்சிபீடமேறிய ஜயவர்தன புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் மூலம் தன்னை முடிசூடிய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இனவாதத்தையும், மதவாதத்தையும் கையிலெடுத்த ஜே.ஆர். மேற்கத்திய வல்லாதிக்கவாதிகளின் செல்லப்பிள்ளையாகவும், சிங்கள பௌத்த மதவாதிகளுக்கு நல்ல பிள்ளையாகவும் நடந்து கொண்டார். நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்ற அதிகாரத்தையும் தனது சட்டைப்பைகளில் வைத்திருந்த அவர் 1982ல் மேலும் 6 வருடங்களுக்கு தனது சர்வாதிகார ஆட்சியை சட்ட விரோதமாக நீடித்துக் கொண்டார். 1983ல் அவருடைய ஆசீர்வாதத்தோடு கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறையில் தமிழ் மக்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு வேலைசெய்த ஊழியர்களையும் சேர்த்து நிறுவனங்கள் கொளுத்தப்பட்டன. தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான கடைகளும் கொளுத்தப்பட்டு முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டமையையும் குறிப்பிட வேண்டும். தமிழ் மக்களுக்கெதிராக நடந்த இன வன்முறை வரலாற்றின் கறுப்பு ஜுலையாக பதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கிறிஸ்தவ மத வழிபாட்டு நிலையங்கள் சிங்கள பௌத்த மதவாதிகளால் தாக்கப்பட்டன. அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பகுதியில் ஜீவனாலோக சபை என்ற கிறிஸ்தவ தேவாலயம் பௌத்த பிக்குகள் தலைமையில் வந்த மதவாதிகளால் சேதப்படுத்தப்பட்டதோடு, வணக்கத்தில் ஈடுபட்டவர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

**தொடர்ச்சி 15ம் பக்கம்**



மாக்சியம்-02

# இயற்கை பற்றி மனித அறிவு சமூகம் பற்றி அறிவாக்கியது எப்படி?

இயற்கை பற்றி மனித அறிவு சமூகம் பற்றி அறிவாக்கியது எப்படி? - மார்க்சியம் - 02

மார்க்சியத்தை தெரிந்து கொள்ளாமல், உலகை நாம் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. மார்க்சியம் மனித சமூகத்தின் நிலவும் சமூக அறியாமையையும், கற்பனைகளையும் மட்டும் போதித்த தத்துவமல்ல. மனித துன்பங்களும் துயரங்களுக்கும் காரணமான சமூக காரணங்களை மட்டும் விளக்குவதுடன் நிற்கவில்லை, அதற்கான தீர்வுகளையும் கூட விஞ்ஞானபூர்வமாக முன்வைக்கின்றது. மனித சமூகம் குறித்தான சமூக விஞ்ஞானத்தை தெரிந்து கொள்ளவும், கற்றுக்கொள்ளவும் முனையும் போதுதான், மனிதன் மனிதனாக மாறுகின்றான்.

மனித சமூகத்துக்கு வெளியில் பொருட்கள் குறித்த மனிதனின் விஞ்ஞானஅறிவு அதை மாற்றுவது போல்,மனித சமூகம் குறித்தான விஞ்ஞான அறிவு சமூகத்தை மாற்றும். "மார்க்ஸ் இயற்கை குறித்த அறிவை மனித சமூகம் குறித்த அறிவாக்கி"யதை எடுத்துக்காட்டி விளக்கும் லெனின் "இயற்கை பற்றிய மனித அறிவு எப்படி அவனிடத்தில் அவனுக்கு அப்பாற்பட்டு உள்ளதோ அதே போன்றுதான் மனிதனின் சமூக அறிவும் சமூகத்தின் பொருளாதார அமைப்பைக் காட்டுவதாகவே அமைகிறது." என்றார்.மனித அறிவு சார்பானது.

மனித அறிவு மனிதனுக்கு அப்பால் உள்ளது. அதைப் பற்றிய அறிவுதான் மனித அறிவாகின்றது. ஆகவே முரணற்ற வகையில் மனித சமூகத்தை தெரிந்து கொண்டு வாழ்வது தான், மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய ஒரு இடத்தை இந்த இயற்கையில் பெற்றுத் தருகின்றது.


இந்தவகையில் சமூக விஞ்ஞானமாக இருப்பது மார்க்சியமாகும். நாம் மார்க்சியத்தை அறிந்து கொள்ளாமல், நாம் வாழும் உலகை முழுமையாக ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது. மார்க்சியம் குறித்து லெனின் "இது மனிதர்களுக்கு ஒருங்கினைந்ததொரு உலகக் கண்ணோட்டத்தை தருகின்றது. இக் கண்ணோட்டம் எந்தவிதமான மூடநம்பிகை, பிற்போக்குத்தனம், முதலாளித்துவ ஒடுக்குமுறையை பாதுகாத்தல் எதனோடும் சமரசம் செய்து கொள்ளாது" என்றார். சமூகம் சார்ந்த எந்த விடையத்துக்கும், மார்க்சியம் முரணற்ற வகையில் ஒருங்கினைந்த ஒரு உலகக் கண்ணோட்டத்தைக் கொடுக்கின்றது. அது கற்பனையில் மனிதனை கனவு காணவைப்பதில்லை. மனிதனுக்கு வெளியில் தீர்வைக் காண்பதில்லை. வெறும் தத்துவவுமும் அல்ல, மாறாக செயலுக்குரிய வழிகாட்டியாக இருக்கின்றது.

"மார்க்சிய தத்துவம் என்பது பொருள் முதல்வாதமேயாகும்" என்றார் லெனின். மார்க்ஸ் கண்டுபிடித்த இயங்கியல் பொருள் முதல்வாதமும் வரலாற்று பொருள் முதல்வாதம், அரசியல் பொருளாதாரமும், விஞ்ஞான சோசலிசமும் என்பன, மனிதன் சமூகமாக வாழ்தற்கேற்ற உலமாக மாற்றக் கோரும் சமூக விஞ்ஞானமாகும்.

இந்த வகையில் மார்க்ஸ்1. வரலாறு பற்றிய பொருள்முதல்வாதம் 2.உபரி மதிப்பை 3.வர்க்கப்போராட்டம் என்ற ஒருங்கினைந்த விஞ்ஞானத்தை கண்டுபிடித்ததார். தன் கண்டுபிடிப்பு என்னஎன்பது பற்றி மார்க்ஸ் "நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ, அந்த வர்க்கங்களுக்கு இடையே போராட்டம் நடப்பதையோ நான் கண்டு பிடித்தவை அல்ல. முதலாளித்துவ வரலாற்றாய்வாளர்களும், பொருளாதார நிபுணர்களும் வெகுகாலத்துக்கு முன்பே இதனை கண்டறிந்து விட்டனர். நான் கண்டறிந்ததில் புதிது என்னவெனில் 1.வர்க்கங்கள் இருந்து வருவது உற்பத்தியின் வளர்ச்சியில் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் தொடர்புடையது 2.வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திக்கே இட்டுச் செல்கிறது. 3.இந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்கங்களை ஒழிப்பதற்கான வர்க்கங்களற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கான மாறுதல் கட்டமாகும் என்பவற்றை நிரூபித்ததே ஆகும்" என்றார்.

இந்த் சமூக விஞ்ஞானம் மார்க்சியமானது. இதைநிறுவ உதவிய முந்தைய தத்துவங்களை பற்றி தெரிந்து கொள்வோம்.

மார்க்சியத்துக்கு முந்தைய கற்பனைவாத சோசலிசம் பற்றி







இது சமூக எதார்த்தம் பற்றி, எதார்த்ததுடன் தொடர்பற்ற வகையில் கற்பனையில் சமூகத்தை மாற்றி அமைப்பது பற்றிய கோட்பாடாகும். மக்களுடனும்,வர்க்கப் போராட்டத்துடன் தொடர்பற்ற வகையில், மாற்றத்தை பற்றிப் பேசியது.

சமூகத்தில் நிலவிய துன்பதுயரங்களை பேசியதுடன்,வர்க்கமற்ற சமூகங்களை பற்றியும், அதை இந்த சமூக அமைப்பின் உள்ளயே மாற்றிவிட முடியும் என்று நம்பியவர்களின் கோட்பாடு தான் கற்பானவாத சோசலிசம்.

இந்த வகையில் தமாஸ் மோர்(1478-1535), தாமஸா கம்பனேல்லா(1568-1639) இருவரும் தனிவுடமை இல்லாத, மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாத, அனைவரும் உழைத்து வாழ்வது பற்றிய கருத்தை முன்வைத்தனர்.

தாமஸா கம்பனேல்லா சோம்பேறிகளையும், செல்வந்தர்களையும் எதிர்த்து கடுமையாக எழுதினார். தமாஸ் மோர் "ஒரு உடல் பருத்த முட்டாள், ஒரு கழுதையைக் காட்டிலும் அதிகமான மூளையைப் பெற்றிராத நபர், பல அறிவாளிகளையும் நல்ல மனிதர்களையும் தனக்கு கீழ்ப்படிபவர்களாகவும் அடிமைகளாக வைத்திருக்க முடிவது ஒரேயொரு காரணத்தினால் மட்டுமே, அதாவது அவர் தங்கக் குவியலை வைத்திருப்பதுதான்" என்றார். இப்படி சமூகத்தின் அவலத்திற்கான காரணத்தை இனம் காட்டி, அதைஎள்ளி நகையாடினார்.

இப்படி சோசலிச கருத்தை முன்வைத்த இவர்கள், அதை எப்படி அடைவது என்பதை முன்வைக்க முடியவில்லை. இதனால் இவர்களை கற்பனைவாத சோசலிஸ்ட்டுகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் எல்லோரும் உழைப்பது பற்றி, உழைப்பைச் சமூகத்திடம் ஒப்படைப்பது பற்றி,அதை பொது பண்டகசாலையில் அவரவர் தேவைக்கு பகிரப்பட்டுவது பற்றியும், தனிவுடைமை இன்மை பற்றியும் கூட பேசினர்.

உழைப்பு தனிவுடமையில் கடுந்தண்டனையாக, துன்பமாக இருப்பதாக கூட இவர்கள் எடுத்துக்காட்டினர். இது பொதுவுடமையில் மகிழ்ச்சியாக, பெருமிதமாக, புகழ் சார்ந்த ஒன்றாக இருக்கும் என்பதைக் கூட எடுத்துக் காட்டுகின்றனர்.

இப்படி இவர்கள் முன்வைத்த கற்பனா சோசலிசத்தை அடுத்து வந்த தலைமுறை சேர்ந்தவர்களான பிரான்சில் குலோட் அன்ரீ சான்-சிமோன்(1760-1825), ஷார்ல் ஃபூரியே(1772-1837), பிரிட்டனில் ராபர்ட் ஓவன்(1771-1858) ஆகிய இவர்களும்,தனிவுடைமை சமூக அமைப்பை கடுமையாக விமர்சனம் செய்தனர். எதிர்கால கம்யூனிச சமூகம் பற்றிய பல கருத்துக்களை உருவாகினார்கள். மக்கள் தங்கள் கருத்தை அறிந்து கொண்டவுடன், ஒரு இலட்சிய பூர்வமான சமூக அமைப்பை படைக்க முடியும் என்று கூட நம்பி அதை பிரச்சாரம் செய்தனர்.

ஷார்ல் ஃபூரியே முதாலாளித்துவ சமூக அமைப்புக்கு முந்தைய சமூக அமைப்பு மறைந்தது போல், முதாலாளிதுவ அமைப்பும் மறையும் என்று கூட நம்பினார். அதனிடத்தில் தானாக ஒரு புதிய சமூகம் தோன்றும் என்று நம்பினார். சான்-சிமோன் தன்னுடைய இந்தக் கருத்தை அரசர்களுக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் தன் கருத்தை முன்னெடுக்க உதவி புரிவர்கள் என்று கூட நம்பினார். ஷார்ல் ஃபூரியே புதிய சமூகத்தை படைக்க பணம் உதவி செய்யுமாறும் செல்வந்தர்களை கோரியதுடன், அதை பத்திரிகையில் விளம்பரம் செய்தார். இதை முன்னெடுக்க பண உதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்து, நாள் தோறும் நண்பகல் வீடு செல்வார். இப்படி கற்பனையில் தன் கருத்துடன் வாழ்ந்தனர்.

ராபர்ட் ஓவன் தன் கருத்தை வெளியிடுவதுடன் நின்று விடாது,அதற்கான செயல் முறையில் ஈடுபட்டார். அவர் தனது கூட்டு உடைமையான தொழிற்சாலையில் துணிச்சலாக பரிசோதனையில் கூட இறங்கினார். அவர் அங்கு வேலை நேரத்தைக் குறைத்தார். ஊதியத்தை உயர்த்தினார். குழந்தைகளுக்கான பாடசாலையை நிறுவினார். 1824 அமெரிக்கா சென்று தொழிலாளர் கூட்டு வாழ்க்கைகான குடியேற்றத்தை நிறுவினார். சிறிது காலத்தில் அது அழிந்துவிட்டது. இப்படி சமூகத்துக்கு வெளியில் கற்பனையில் கருத்துகளையும், கருத்துகளை

தொடர்ச்சி 15ம் பக்கம்

தொடரும்

# ரிஸானாநபீக் செய்யதவறியவை செய்யவேண்டியவை ?

ஒன்றறைவருடங்களுக்கும் மேலாகதனதுபணக்கார எஜமானின் குழந்தையைகொலைசெய்தார் என்ற குற்றசாட்டின் பேரில் சவுதிஅராபிய நாட்டின் சட்டங்களுக்கமைய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிறுமியான ரிசானாநபீக் கடந்த15ம் திகதி

தூக்கிலிடப்பட்டமை, உள்நாட்டிலும் அதேபோல் வெளிநாட்டிலும் பலத்த எதிர்ப்பலைகளையும் சலசலப்புக்களையும் தோற்றுவித்து, ஊடகங்களில் விலைமதிப்பிறங்கிய, விற்பனை செய்யமுடியாத செய்தியாகிய பின் தற்போது மெல்ல மெல்ல மறக்கப்படும் விடயமாகிவிட்டது. இனிவரும் காலங்களில் அரசாங்கத்தைவிமர்சிப்பதற்கானஓர் ஆயுதமாகரிசானாநபீக் விவகாரம்,தேர்தல் வெற்றியையும் பதவியையும் இலக்காககொண்டஅரசியல்வாதிகளினால் அரசியல் மேடைகளில் மறக்காமல் பயன்படுத்தப்படும் மறக்கப்பட்டவிடயமாகிவிடும். ரிசானாநபீக் செல்வந்தநாடுகளின் செல்வந்தர்களின் வீடுகளில் அடிமையாகவேலைசெய்ய இலங்கைதரகுமுதலாளித்துவஅரசினால் ஏற்றுமதிசெய்யப்பட்ட லட்சக்கணக்கான உழைக்கும் வர்க்கபெண்களில் ஒருவர். ரிசானாநபீக் கொலைசெய்யப்பட்டமுதலாவதுவீட்டுபணிப்பெண்ணடிமையும் இல்லை. இறுதியானஅடிமையாகவும் இருக்கபோவதில்லை.

இதற்குமுன்னும் பலர்பிணமாகதிருப்பிஅனுப்பபட்டிருககின்றார்கள்.வன்முறைகளினால் பாதிக்கப்பட்டபலர்புத்திபேதலித்தநிலையில் திரும்பிவந்திருக்கின்றார்கள். பராதூரமானகாயங்களுடன்,உடலில் ஆணிகள் அறையப்பட்டநிலையில் எனஎண்ணற்றவர்கள் இலங்கைக்குதிருப்பிஅனுப்பப்பட்டிருக்கின்றார்கள். வன்முறைகள் தாங்கமுடியாதுதற்கொலைசெய்துகொண்டவர்கள்,வன்முறைக்குள்ளாக்கப்பட்டுமத்தியகிழககுநாடுகளின் குப்பைகூடங்களில் எறியப்பட்டவர்கள் என இந்தஅடிமைவியாபாரதொழிற்துறையில் பாதிக்கப்பட்டவர்களேஅதிகம்.

மத்தியகிழக்குநாடுகளின் செல்வந்தவீடுகளில் அடிமைகளாகவேலைசெய்பவர்களின் தொகை4 லட்சத்திற்கும் அதிகமாகும். இவர்கள் மூலம் நாட்டிற்குகிடைக்கும் அந்நியசெலவானி--- ரூபாய்களாகும். அரசாங்கத்திற்குகிடைக்கும் வருமானம் ----ரூபாய்களாகும். இலங்கையின் முதலாளித்துவஅரசிற்குதலைமைவகித்தஅரசாங்கங்கள் அனைத்தும் இந்தஅடிமைவியாபாரத்தைவிரிவடையசெய்துதன் வருமானத்தைஅதிகரிக்கவேமுனைந்தன,முனைகின்றன. முன்புஏகாதிபத்தியநாடுகள் யுத்தங்களின் மூலம் நாடுகளைஅடிமைபடுத்திஅந்நாடுகளில் வாழ்ந்தஉழைப்பாளிகளைஅடிமைகளாகதன் நாட்டிற்குகொண்டுச்சென்றுதெருக்களில் ஏலம் போட்டு செல்வந்தர்களுக்குவிற்பனைசெய்தன. சிலசமயம் தரகர்களைநியமித்துபோலிசலுகைகளைதருவதாகஏமாற்றிதொழிலாளிகளைநாடுவிட்டுநாடுகடத்திசென்றன.காலனித்துவகாலம் முடிந்துபுதியஉலகஒழுங்கில் தராளமயபொருளாதாரமும்,பூகோளமயமாதலும் நடைமுறையிலிருக்கும் சமூகபொருளாதாரஅரசியல் முறைமைக்குள் மனிதனைஅவன் அடிமைபடுத்தப்படுகின்றோம் என்பதைஉணராதவண்ணம் அடிமைபடுத்துகின்றமையும்,ஒடுக்கப்படுகின்றோம் என்பதைஉணராதவண்ணம் ஒடுக்கின்றமையும் மிக சூட்சுமமாகமேற்கொள்ளப்படுகின்றது.முன்பு இரும்புசங்கிலியால் கழுத்தைநெறித்தவர்கள் தற்போது கழுத்துப்பட்டியால் நெருக்குகின்றார்கள். பொருளாதாரநெருக்கடிகளால் அல்லலுறும் உழைக்கும் வர்க்கத்தினர்,பணத்தைக்காடடிவெளிநாட்டுசெல்வந்தர்களின் வீடுகளில் அடிமைகளாக வேலைசெய்ய கவர்ந்திழுத்து

> **“இலங்கையின் முதலாளித்துவஅரசிற்குதலைமைவகித்த அரசாங்கங்கள் அனைத்தும் இந்தஅடிமைவியாபாரத்தை விரிவடையசெய்துதன்வருமானத்தைஅதிகரிக்கவேமுனைந்தன,முனைகின்றன.”**

செல்லப்படுகின்றார்கள். இதைஎம் போன்றநாடுகளின் அர்கள் ஊக்குவிக்கின்றன. எம் நாட்டின் அரசுக்கள் உழைக்கும் வர்க்கத்தைஅடிப்படையாகக் கொண்டசுய பொருளாதார திட்டத்திற்குபதிலாகபெரும் முதலாளிகளுக்குசேவைசெய்துதரகுபணம் பெறும் பொருளாதாரதிட்டமிடலேயேகொண்டுள்ளனர். இந்தமிலேச்சதனமானசுயலாபத்தையும் சுரண்டலையும் இலக்காககொண்டசமூகபொருளாதாரமுறைமைக்குள் பலியானஆயிரக்கணக்கானவர்களில் ஒருவர்தான் ரிசானாநபீக்கும்.

இந்தநவீனஅடிமைவியாபாரம்



கதைக்கப்படாதபெரும் சமூகஅவலங்களைதோற்றுவித்துள்ளது. வெளிநாடுகளிற்குவேலைதேடிசெல்லும் தாய்மார்களின் குடும்பங்கள் அனைத்தும் ஏதோஒருவகையில் பாதிக்கப்பட்டுள்ளன. பிள்ளைகள் கவனிப்பாற்றுநிர்கதியாக்கப்பட்டுள்ளனர். உறவினர்களின் பராமரிப்பில் விடப்படும் குழந்தைகள் துன்புறுத்தல்களிற்குஉள்ளாக்கப்படுகின்றனர். பெண் பிள்ளைகள் பலசமயம் தந்தைமார்களினாலும் உறவினர்களாலும் பாலியல்கொடுமைக்காளாக்கப்படுகின்றனர். வெளிநாட்டிற்குகணவனோ,மனைவியோசென்றபின் இங்கிருக்கும் கணவனோமனைவியோவேறுநபர்களுடன் தொடர்புகளைஏற்படுத்திக் கொள்வதால் அல்லதுவெளிநாட்டிற்குசெல்லும் கணவனோமனைவியோஅங்கேவேறுநபர்களுடன் தொடர்புகளைஏற்படுத்திக் கொள்வதால் நிர்க்கதியானகுடும்பங்களும் அதிகம். மேலும்,இக்குடும்பங்களின் பிள்ளைகளோவீட்டில் கிடைக்காதஅன்பையும் அரவணைப்பையும் வெளிச்சமூகத்தில் தேடிச் செல்கின்றார்கள். அவர்கள் அன்பையும் அரவணைப்பையும் தேடிச்செல்லும் முதலாளித்துவ முறைமையினால் உருவாக்கப்பட்ட சமூகமோ குப்பைக்கூலமாக்கப்பட்ட நயவஞ்சகமும் ஏமாற்றுக்குணமும் கொண்ட மனிததன்மையை இழந்துவிட்டசமூகம். இந்தசமூகத்தினால் சீரழிக்கப்பட்வர்கள் அதிகம். மனிதன் ஒருசமூகவிலங்காவான்.

இவனால் சமூகதொடர்புகள் குடும்பஅரவணைப்பு இல்லாமல் மனிதனாகதிருப்தியாகவாழமுடியாது. வெளிநாடுகளிற்குவேலைதேடிசெல்பவர்களின் குடும்பங்களில் தலைவிரித்தாடும் இவ் தனிமைஉணர்விற்கும் திருப்தியின்மைக்கும் போதைபொருள்,சமூகவலைத்தளங்கள், இணையம்,முறையற்றதொடர்புகள் எனபலவிதமானமுரன் தீர்வுகள் நாடப்படுகின்றது.ஆக மொத்தத்தில் வெளிநாட்டிற்குபணியாளர்களைஅனுப்பும் அடிமைவியாபாரதொழிற்துறைபாரியசமூகபிரச்சனையையும் மனிதஉரிமைமீறலையும் ஏற்படுத்தியிருக்கின்றது. கைமாற்றப்படும் பணம் மூலம் இவையெல்லாம் அரசினாலும் சம்பந்தபட்டவர்களினாலும் மறைக்கப்பட்டவிடயங்களாக்கப்பட்டுள்ளன. இதிலொன்றுதான் ரிசானாநபீக்கின் விடயமும். தூக்குதண்டனைஎன்பதாலும் சர்வதேசத்தின் தலையீடுகளினாலும் அனைவரினதும் கவனத்தைஈர்த்ததுடன் அம்பலத்திற்கும் கொண்டுவரப்பட்டது. இதன் போதுகோபப்பட்ட அனுதாபப்பட்டஅனைவரும் வெலிக்கடைசிறையிலேகைதிகள் மிருகங்கள் போல் சுட்டக்கொல்லப்பட்டபோதும், வவுனியாசிறையிலேநிமலரூபனும்,டெல்ரூக்சானும் அடித்துகொல்லப்பட்டபோதும் கோபப்படவோ அனுதாபப்படவோ இல்லைஎன்பதும் குறிப்பிடப்படவேண்டியவிடயம்.

இவ் அடிமைவியாபாரத்தைஆரம்பம் முதலேஅம்பலப்டுத்தி எதிர்க்காமல் விட்டதன் பலன் தான் ரிசானாநபீக்கின் மரணத்திற்குகாரணம்.

ரிசானாவைகொன்றதுசவுதிஅரேபியஅரசும் அதன் சட்டமும் அல்லஎம் நாட்டின் முதலாளித்துவபொருளாதாரஅமைப்பும் அதனை வீழ்த்திடமுடியாதஎமதுகையாலாகாததனமும் தான். எனவே,செய்ததவறைமீண்டும் மீண்டும் செய்யக்கூடாது. முதலாளிகளுக்குமுட்டுக்கொடுத்துஉழைப்பாளிகளைஒடுக்கிஆளும் ஆட்சிமுறையினால் நடத்தப்படும் அடிமைவியாபாரத்தைஒழித்து,உழைப்பாளிகளின் பொருளாதாரத்தையும் நலனையும் உறுதிசெய்யும் ஆட்சிமுறையைஏற்படுத்தல் வேண்டும். இதனைமுதலாளித்துவத்திற்குமுட்டுகொடுக்கும் தரகுபணத்தையும் பதவிகளையும் உழைப்பாளிவர்க்கத்தின் மீதான அதிகாரத்தையும், அதிகாரபங்கிடலையும் இலக்காகக் கொண்டமுதலாளித்துவமற்றும் சமூகசனநாயகஅரசியல் கட்சிகளால் செய்திடமுடியாது. உழைக்கும் வர்க்கத்திற்காகஉழைக்கும் வர்க்கத்தினால் கட்டியெழுப்பப்பட்டஉழைக்கும் வர்க்கத்தின் அதிகாரத்தைநிலைநாட்டுவதைநோககாககொண்ட,உழைக்கும் வர்க்கஅதிகாரத்தைநிலைநாட்டுவதற்கானகோட்பாடுகளின் அடிபடையில் இயங்கும் புரட்சிகரஅமைப்பினால்,கட்சியினால் மட்டுமேசெய்திடமுடியும். அத்தைகையசரியான இயக்கத்தைகட்சியை இனங்கண்டுசேர்ந்தியங்கிபலபடுததிஉழைக்கும் வர்க்கத்தின் அதிகாரத்தைநிலைநாட்டும் புரட்சியைசரியானபாதையில் முன்னெடுப்பதேரிசானாநபீக் விவகாரம் உணர்த்திநிற்கும் செய்யத்தவறிய,செய்யவேண்டியபணியாகும்.

**இன்றைய சூழ்நிலையில் இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து நவமணி பத்திரிகையின் ஆசிரியரும் பேராதனை பல்கலைக் கழக முன்னால் சிரேஷ்ட விருவுரையாளருமான ஜனாப் என்.எம். அமீன் அவர்களோடு போராட்டம் பத்திரிகை நடத்திய நேர்காணலிலிருந்து”**

# இஸ்லாமிய முறைப்படி முஸ்லிம்கள் ஹலால் உணவையே உட்கொள்ள வேண்டும்

## என்.எம். அமீன், “நவமணி” பத்திரகையின் ஆசிரியர்



***போராட்டம்: இன்றைய நிலையில் நாட்டில் 65வது சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. சுதந்திர தினம் பற்றிய உங்களது கருத்து என்ன?***

***என்.எம். அமீன்:*** இந்தக் கேள்வியைக் கேட்கும்போது சுதந்திரம் என்ற ஒன்று இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. ஊடக சுதந்திரம் இருப்பதாக சொன்னாலும் கூட இன்று மறைமுகமாக பறிக்கப்பட்டு வருகிறது. ஒருவரின் கருத்தை அவரின் சுய விருப்பத்தின் பேரில் வெளியிடுவதுதான் சுதந்திரம் என்பது. ஆனால் பத்திரிகையாளர்களால் சுதந்திரமாக கருத்து தெரிவிக்க முடியாதுள்ளது. அப்படி மீறிவெளியிட்டால் அவர் மாற்றுக் கண்கொண்டு பார்க்கப்படுகிறார்கள். இந்த நிலையில் சுதந்திரம் என்பதை யோசிக்க வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் ஏற்கனவே பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள். கொடூர யுத்தம் ஒன்று முடிந்ததாகக் கூறப்படுகின்றது. இருந்த போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு இற்றை வரைக்கும் கிடைத்த பாடில்லை. தற்பொழுது நாட்டில் புதிய ஒரு பிரச்சினை துவங்கியிருக்கின்றது. அதுதான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம். இலங்கையின் சுதந்திரத்திற்காக இந்த நாட்டு சிங்களவர்கள் மாத்திரமல்ல தாய்நாட்டின் மீது நேசம் வைத்திருந்த முஸ்லிம்களும், தமிழர்களும் சுதந்திரத்திற்காக பெருமுயற்சி எடுத்ததை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதில் ஒரு நிமிடத்தையும் தாமதிக்கக்கூடாது என்று அறிஞர் டி.பி.ஜாயா கூறியதை மறந்து விட்டார்கள்போலும். ஆனால் இப்பொழுது நாட்டில் நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும் போது உண்மையில் சுதந்திரம் இருக்கின்றதா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகின்றது.

போராட்டம்: முஸ்லிம்களின் ஜனத்தொகை பெருகுவதாகக் கூறப்படுகின்றது இது பெரும்பான்னை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக சில கடும்போக்கு வாதிகள் கூறுகிறார்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

என்.எம்.அமீன்: ஜனத்தொகை வளர்ச்சி பொதுவாக நாட்டில் கூடியுள்ளது என்பது உண்மைதான். அந்த அடிப்படையில் பார்க்கப்போனால் முஸ்லிம்களின் சனத்தொகையும் விகிதாசாரத்திற்கு ஏற்ப அதிகரித்துள்ளது. நாம் கடந்த கால புள்ளி விபரங்களை பார்ப்போமாயின் 7.6 வீதமாக இருந்த முஸ்லிம்களின் சனத்தொகை 9.8 வீதமாக ஆக உயர்ந்துள்ளது. தமிழர்களின் சனத்தொகை 8 வீதமாக இருந்தது 9 வீதமாக ஆக அதிகரித்துள்ளது. சிங்களவர்களின் சனத்தொகை 68 வீதமாக ஆக இருந்தது 71 வீதமாக அதிகரித்துள்ளது. இந்த புள்ளி விபரங்களைப்பார்க்கும் போது தற்போது பரப்பப்பட்டுவரும் கருத்தானது பொய் என்பதை புரிந்துகொள்ள முடியும். இன்னும் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் முஸ்லிம் மக்களும் குழந்தைகள் பெற்றுக் கொள்ளத்தானே வேண்டும். இஸ்லாத்தில் கருக்கலைப்பிற்கு அனுமதியில்லை கருத்தடை இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் கட்டுப்பாடோடு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தற்போது ளஅள ந-அயடை போன்றவற்றின் ஊடாக போலிப்பிரச்சாரம் இடம்பெறுகின்றது 2052 இல் முஸ்லிம்களின் சனத்தொகை 52 வீதமாக ஆகிவிடுமென்று கூறப்படுகின்றது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஆதாரமற்ற குற்றச்சாட்டு. 68ூமான முஸ்லிம்கள் வடக்கு- கிழக்கில் வாழ்கின்றார்கள். ஆனால் நாட்டில் பல மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள் என்ற கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

***போராட்டம்: இப்பொழுது ஹலால் சான்றிதழ் பற்றி பேசப்படுகின்றது இதற்காக அறவிடப்படும் பணம் இஸ்லாமிய அமைப்புகளை போய்ச்சேருவதாக கூறப்படுகின்றது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?***

***என்.எம். அமீன்:*** இஸ்லாமிய முறைப்படி முஸ்லிம்கள் ஹலால் உணவையே உட்கொள்ள வேண்டும். ஹலால் சான்றிதழை ஜமியத்துல் உலமா சபை வழங்குகின்றது. நாட்டில் 3400 பொருட்களுக்கு ஹலால் இருப்பதாக கூறப்படுகின்றது. இதில்4 கம்பனிகள் மாத்திரமே வருடமொன்றுக்கு 175,000 ரூபாவை ஹலால் சான்றிதழுக்காக செலுத்துகின்றன. ஜமியத்துல் உலமா சபையின் மாதாந்த வருமானம் 16 அல்லது 17 இலட்சங்களாகும். அங்கு 47 ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 40.5 மில்லியன் ரூபா சம்பளத்திற்காக செலவாகின்றது. ஜம்மியத்துல் உலமாவால் ஹலால் சான்றிதழ் வழங்குவது கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவாகியுள்ளது. இதில் ஏதாவது தவறுகள் இருப்பின் அரசிடம் திறமை வாய்ந்த புலனாய்வுத் துறை உள்ளது அவர்களை வைத்து தேடலாம். அப்போது தான் உண்மை வெளிப்படும்.

***போராட்டம்: தம்புள்ளயில் பள்ளிவாசல் உடைக்கப்படும் போது அரச படைகள் வெறுமனே பார்த்துக் கொண்டு நின்றன. இனவாதத்திற்கு எதிராக மக்களுக்கு விளக்கமளிக்கும் துண்டுப்பிரசுரம் பகிர்ந்த சம உரிமை இயக்கத்தினர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?***

***என்.எம். அமீன்:*** நீங்கள் சொல்வது உண்மைதான். தம்புள்ளயில் பள்ளிவாசல் இடிக்கப்படும் பொழுது அரச படைகள் அருகில் நின்றன. பிக்குகள் சிலரும் இந்த

> **ஒருவரின் கருத்தை அவரின் சுய விருப்பத்தின் பேரில் வெளியிடுவதுத-ான் சுதந்திரம் என்பது. ஆனால் பத்திரிகையாளர்களால் சுதந்திரமாக கருத்து தெரிவிக்க முடியாதுள்ளது.**

நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். கடந்த காலங்களில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தபோதிலும் இராணுவத்தினர் முஸ்லிம்களின் தொழுகையை நிறைவேற்றுவதற்கு அனுமதியளித்தார்கள். இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. தம்புள்ள சம்பவம் மட்டுமல்ல அனுராதபுரத்தில் சியாரம் இடிக்கப்பட்டது. தெஹிவலையில் பள்ளியில் தொழக்கூடாதென்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. குருநாகல் பகுதியில் பள்ளிவாசலை அகற்றுமாறு கூறப்பட்டது. மட்டுமல்ல, சம உரிமை இயக்கத்தினரை தாக்கியது வரை நாட்டில் ஜனநாயகம் தொடர்ச்சியாக மீறப்பட்டுக்கொண்டு வருகின்றது என்பதையே மேற்படி சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட நிகழ்வுகள் மக்கள் மத்தியில் அச்சத்தை தோற்று வித்திருக்கின்றது.

***போராட்டம்: இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக பல்வேறு பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வரும் பொதுபலசேனா பற்றி உங்களது கருத்து என்ன?***

***என்.எம்.அமீன்:*** இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றார்கள்.1977ம் ஆண்டுக்குப்பிறகு சர்வதேச நாடுகளின் தொடர்பு அதிகரித்திருக்கின்றது. இதன் காரணமாக இலங்கை முஸ்லிம்களும் சர்வதேச அளவில் பேசப்படுகிறார்கள். இதனால் இஸ்லாத்தில் உள்ள பல விடயங்களை அறியக்கூடிய வாய்ப்பு அனைத்து மக்களுக்கும் கிடைத்திருக்கின்றது. இதனால் முஸ்லிம்களின் சர்வதேச தொடர்பு அதிகரித்தது. அதை வைத்துக்கொண்டு முஸ்லிம்களுக்கு அரபு நாடுகள் உதவுகின்றன இதனால் முஸ்லிம்கள் வேறுமாதிரியாக செயற்படுகிறார்கள் என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத உண்மையாகும். தமிழர்கள் 50க்கு 50 கேட்கும் போது முஸ்லிம்கள் அவ்வாறு கேட்க வில்லை. அவ்வாறு கேட்டிருந்தால் நாடு என்றோ துண்டாடப்பட்டிருக்கும். முஸ்லிம்கள் நாட்டைப்பிரிக்காது ஒன்றாகவே வாழ விரும்பினார்கள் இதுதான் உண்மை. ஆனால் இன்று இப்படிப்பட்ட சம்பவங்கள் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பேசப்படாதது துரதிஸ்ட்ட வசமாகும்.பொது பலசேனா தற்போது பரப்பிவரும் கட்டுக்கதைகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

***போராட்டம்: இறுதியாக தற்போது நாட்டில் உருவாகியுள்ள இனமுறுகல் மற்றும் பொருளாதார பிரச்சினை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?***

***என்.எம்.அமீன்:*** முன்பு சகோதரத்துவ வாஞ்சையோடு சந்தோஷ மாக இருந்த முஸ்லிம் சிங்கள மக்கள் மத்தியில் திட்டமிட்ட சில தீய சக்திகள் இனவாதத்ததை பரப்பி வருகின்றன. இதே போன்ற நிகழ்வுதான் தமிழ் மக்கள் மத்தியிலும் பரப்பப்பட்டது அது ஆயிரக்கணக்கான மனிதப்படுகொலையுடன் முடிவுக்கு வந்தது. தற்போது நாட்டில் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதத்தை பரப்ப எத்தனிக்கும் நடவடிக்கையானது கடந்த கால நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவதோடு, இப்போது நடக்கும் சம்பவங்கள் மிகுந்த வேதனையைத் தருகின்றது. நாட்டில் நல்லதொரு பொருளாதார கொள்கை இல்லாததினால் நிறைய கம்பனிகள் மூடப்பட்டுள்ளன. இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்குவோம் என்று சொல்கின்றார்கள் ஆனால் நடந்தது ஒன்றுமில்லை. வெளிநாட்டு நிறுவனங்கள் சிலவேலைகளைச் செய்கின்றன பாதை கட்டுமானப் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை விசேடமாகக் கூறலாம். ஆனாலும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் பொழுது அவர்கள் நினைப்பது போல் செய்யாமல் நாட்டின் நிலைமையை கருத்திக் கொண்டு செயற்படவேண்டும்.

“இராணுவ ஆட்சியை நிறுத்து”- யாழில் கையெழுத்து சேகரிக்க சென்ற சம உரிமை இயக்கத்தின் பயண அனுபவ பகிர்வு- பழ.றிச்சர்ட்

திட்டமிட்டதற்கு ஒரு மணித்தியாளத்திற்கு முன்னமே யாழ் நகரை வந்தடைந்ததால் பண்னை பகுதியில் வாகனத்தை நிறுத்தி சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தோம். வாகனத்தின் பின் இருக்கையில் இருந்த நான் போராட்டம் பத்திரிகைகளை மடித்துக்கொண்டிருந்தேன். எனக்கு முன் இருக்கையில் இருந்த தோழர் ரங்கவும் எனக்கு உதவி செய்து கொண்டிருந்தார். தோழர் ரங்க ரஜரட்ட பல்கலைக்கழக மாணவன். பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றிய தலைவராக இருந்த காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்ட காரணத்தினால் நான்கு வருட வகுப்பு தடையை அனுபவிப்பவர்.வகுப்பு தடையின் பின் கட்சியில் முழுநேரமாக அரசியல் பணியில் ஈடுபடுகிறார். வாகனத்தை செலுத்திய தோழர் இரவு முழுவதும் வாகனம் செலுத்திய அசதியினால் சாரதி இருக்கையிலே அயர்ந்த நித்திரையிலிருந்தார். அவர் கம்பஹாவை சேர்ந்தவர். வாகனத்திற்குள் தோழர் நிசாந்தவும் தோழர் ஜூட்வும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். தோழர் நிசாந்த கட்சியின் ஊடக பிரிவை சேர்ந்தவர். தோழர் ஜூட் புத்தளத்தை சேர்ந்தவர். பேரினவாதிகளினால் மிஷனரிமார்களின் துணையுடன் சிங்கள மொழி மூல கட்டாயக் கல்வியை நடைமுறை படுத்தி சிங்களம் கதைப்பவர்களாக மாற்றப்பட்ட தமிழ் தெரியாத புத்தளம் மாவட்ட தமிழர்களில் அவரும் ஒருவர். கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் கூட.

யாழ் மக்களின் சுறுசுறுப்பை ரசித்தபடியே பண்ணை பகுதியின் இதமான சுற்றாடலை அனுபவித்துக்கொண்டிருந்த எமக்கு கோட்டை பக்கமிருந்து இரண்டு உந்துரொளிகள் சந்தேகத்திற்கிடமான முறையில் பண்னை வாகன உந்துரொளிகள் புறப்பட்டு செல்வதையும் உணரக்கூடியதாயிருந்தது. சாரதி இருக்கையில் நித்திரை கொண்ட தோழருக்கு வாகன கண்ணாடி நொறுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர சில வினாடிகள் சென்றன. யாழ் கோட்டை பகுதியிலிருந்து சுமார் இரண்டு கிலோ எடையுடைய கற்களை, அந்த பகுதியில் இருந்த கடையில் வாங்கிய பிளாஸ்ரிக் பையினுள் கொண்டு வந்து சாரதியின் பக்கமிருந்த கண்ணாடி மீது எறிந்திருந்தார்கள்.

வாகன கண்ணாடியை நொறுக்கி விட்டு ஓடியது இராணுவம் என்பதை நன்கு அறிந்திருந்தும் சுற்று வட்டாரத்திலிருந்த மக்கள் என்ன ஏது என்று பதறியடித்து ஓடி வந்து விசாரித்தார்கள். தமிழர்களின் கலாசாரம் அது. என்னுடனிருந்த சிங்கள தோழர்கள் மொழி தெரியாமல் முழுசுவதை பார்த்து தெரிந்த ஓரிரண்டு சிங்கள வார்த்தைகளை கொண்டு விசாரிக்க முனைந்தார்கள். இவர்கள் சிங்களத்தில் விளங்கப்படுத்தினார்கள். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இருக்கும் பிரதான வேறுபாடுகளில் இதுவும் ஒன்று. சிங்களவர்கள் எப்போதும் தங்கள் மொழியில் தான் கதைப்பார்கள், தமிழர்களும் அதே சிங்களத்தில் கதைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். தமிழில் தான் கதைப்போம் என்றால் பிரிவினைவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் தமிழர்களை சித்தரிக்க பழகியிருக்கின்றார்கள். மறுபுறத்தில் தமிழர்கள் எப்போதும் சிங்களவர்களுக்கு புரியும் மொழியிலே கதைக்க முயற்சிப்பார்கள். இதற்கு இவர்களின் அரசியல் கட்டமைக்கப்பட்ட தளமும் ஒரு காரணம். தமிழர்கள் பேரினவாதத்தை தான் எதிரிகளாக கருதினார்கள். தனி சிங்களவர்களை அல்ல. ஆனால் சிங்களவர்களுக்கோ ஒவ்வொரு தமிழனும் எதிரி. இடதுசாரிகளிடமும் கூட குறைந்தளவில் இதைக்காணலாம். இறுதியில் நான்



# சம உரிமை இ
# பயண அனுப







தரிப்பிடத்தை ஊடுறுத்து கொண்டு வருவதை காணக்கூடியதாயிருந்தது. திகிலுடன் உசாரான தோழர்கள், அந்த உந்துரொளிகளை வைத்த கண்வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்விருவராக நான்கு பேர். சீருடை தவிர்ந்த நேரங்களில் சிங்கள இராணுவம் உடுத்தும் அதே Bottom அணிந்த இருவர் உந்துரொளியை செலுத்த பின்னால் இருந்த இருவரும் தமிழ் பேசும், புலனாய்வாளர்களின் கைக்கூலிகளுக்கு வழங்கப்படும் அதே சலுகை உடைகளை அணிந்திருந்தார்கள். இவர்களை பார்த்தவுடன் கண்டுபிடிக்குமளவிற்கு இவர்களுடனான அனுபவம் எமக்கிருந்தது. எம் வாகனத்தை நோக்கி மெல்ல மெல்ல ஊர்ந்து வந்த உந்துரொளிகள் எம் வாகனத்தை கடந்து எமக்கடுத்ததாக நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் பக்கம் சென்று மறைவதை பார்த்து சிறு புன்னகையுடன், போய்விட்டார்கள் என்று நினைக்கும் போதே அடுத்தடுத்ததாக இரண்டு பெரிய சத்தங்கள். என்ன என்று ஊகிக்க முன்பே இரண்டு சலுகை உடை அணிந்த கைக்கூலிகளும் வாகனத்தின் முன்னாலிருந்து ஓடி மறைவதையும் தொடர்ந்து கடும் வேகத்துடன் இரண்டு

தலையிட்டு சமவுரிமை இயக்கத்தின் சார்பில் “இராணுவ ஆட்சியை உடன் நிறுத்து” என்ற கோரிக்கையுடன் “ யாழ் பல்கலைக்கழக மாணவர்களை உடன் விடுதலை செய்”,“அரசியல் சிறைக்கைதிகளை உடன் விடுதலை செய்”,“நில ஆக்கிரமிப்பை உடன் நிறுத்து”,“கைதுகளையும் கடத்தல்களையும் உடன் நிறுத்து” எனும் கோஷங்களை முன்வைத்து நீண்ட பதாதை கையெழுத்திடும் கவனயீர்ப்பு நடவடிக்கைக்காக யாழ் வந்த விடயத்தை விளங்கப்படுத்தினேன். வாகன காப்புறுதிகாரர்கள் விடயத்தை கேள்விப்பட்டவுடன் வரமறுத்து விட்டார்கள். மக்கள் நாம் அந்த இடத்திலிருந்து புறப்படும் வரை கவலையுடன் அவ்விடத்திலே நின்றிருந்தனர்.

புத்தளம் பகுதியிலிருந்து வந்திருந்த தோழர்களும் எம்முடன் இணைந்து கொள்ள 20 பேர் வரையிலான குழுவாக பேருந்து நிலையத்தில் கையெழுத்திடலை திட்டமிட்டபடியே ஆரம்பித்தோம். ஆரம்பித்து 5 நிமிடங்களில் 3 வாகனங்களில் தடி பொல்லுகளுடன் பொலீசார் அவ்விடத்திற்கு அருகில் வந்திறங்கினார்கள். 30 நிடங்கள் கடந்திருக்கும் 6-8 பேர் வரையிலான சிவில் உடையில் நின்ற இராணுவ குழு கழிவு எண்ணெய் தாக்குதலை நடத்த தொடங்கினார்கள். சிறு பொலித்தீன் பைகளில் கழிவு எண்ணெயை நிரப்பி மறைந்திருந்து கையெழுத்திடுவதற்காக பதாதை கட்டப்பட்டிருந்த இடத்தை நோக்கி எறிந்தார்கள். பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த கடற்படையினரின் பேருந்து, தாக்குதலிற்கான தளமாக செயற்பட்டது. அங்கிருந்து தான் கழிவு எண்ணெய் பைகளில் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டது. பொது மக்கள், ஊடகவியளாளர்கள் மற்றும் சம உரிமை இயக்கத்தினர் தாக்குதலிற்கு உள்ளானாலும் யாரும் அதை பெரிதாக பொருட்படுத்தாமல் தன் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டதை கண்டு தாக்குதல் நடத்திய குழுவினர் எரிச்சலடைந்து தாக்குதலை அதிகரிக்கவே, 2 மணித்தியாளங்கள் நடந்த கையெழுத்து சேகரித்தலை முடித்துக் கொண்டு புறப்பட்டோம்.

இத்தனையும் பொலீசும் இராணுவமும் பார்த்துக் கொண்டிருக்க தான் நடந்தது. இது தான் யாழ்பாணத்திலிருக்கும்








# ...யக்கத்தின் ...வ பகிர்வு

ஜனநாயகம். “நாங்கள் யுத்தத்தில் வெற்றிகொண்ட பிரதேசம், இங்கு நடப்பதெல்லாம் நாம் நினைத்தபடி தான் நடக்க வேண்டும்” இந்த நிலைப்பாட்டையே அரசாங்கம் கடைபிடிக்கின்றது. “நாங்கள்” என்பதற்குள் மகிந்தவும் அவரது உறவினர்கள் மட்டுமே அடங்குவார்கள். மற்றதெல்லாம் எலும்பு தின்னி மிருகங்கள். மகிந்த நினைப்பதை அதிகமாக நிறைவேற்றுபவர்களுக்கு அதிக எழுலும்புகள் கிடைக்கும். இராணுவத்தை பற்றி சொல்ல வேண்டியதில்லை. அரசுகள் தன் அதிகாரத்தை தக்க வைக்க கூலி கொடுத்து உருவாக்கி வைத்திருக்கும் ஆயுதகும்பலே இராணுவமாகும். இந்த கும்பலிற்கு முதலாளித்துவ அரசாங்கங்கள் தேச பற்று சாயம் பூசி அழகுபடுத்தி கொள்வார்கள். இந்த முதலாளித்துவ அரசுகளின் இராணுவம் மக்களின் நலன்களை கருத்திற் கொண்டு செயற்படாது. அரசுகளை பாதுகாப்பதற்காகவே செயற்படும். இலங்கை இராணுவம் மட்டுமல்ல உலகின் எந்த இராணுவமும் இதே பணியை செய்பவை தான். மக்களின் சுய தேவை அடிப்படையில் மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படாத மக்கள் படையை தவிர்ந்த எந்த படையும் மக்களுக்காக பணியாற்றாது என்பது வரலாறு கற்று தந்த பாடம். சமவுடமை சமூக முறைமைக்குள் மாத்திரமே இவ்வாறன மக்கள் படைகள் உழைக்கும் வர்க்கத்தினால் உருவாக்கப்பட்டிருந்தன.

அரச கூலிப்படைகள் முதலாளித்துவ முறையின் காட்டுமிராண்டித்தனத்தையும் மிலேச்சத் தனத்தையும் மீண்டுமொரு தடவை நன்கு வெளிக்காட்டின. யாழ்பாணத்திலே இவர்களின் பிரதான பணி மக்களை அடக்கி அடிமைகளாக வைத்திருப்பதும், அதற்கெதிராக குரல் கொடுப்பவர்களை அழிப்பதும், மகிந்தவின் திருவடிகளை தொட்டு வணங்கி தன் தின பணிகளை ஆரம்பிக்கும் கோவணம் கலைந்தவர்களை தவிர வேறு எவரும் அரசியலில் ஈடுபடுவதை தடுப்பதும் ஆகும். யுத்தம் முடிந்தது முதல் அரச கூலிப்படைகள் இதை தான் செய்கின்றன. யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் சகல ஜனநாயக ஆர்பாட்டங்கள் மீதும் கழிவு எண்ணெய் வீசுதல், அரசியல் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துதல், அச்சுறுத்தலுக்கு அடிபணியாதவர்களை கடத்துதல், கொலை செய்தல் என்பன கலாச்சாரமாகி விட்டன.

இந்த அடிவருடி பொலீசிடம் முறைப்பாடு செய்வதில் எந்த பயனும் இல்லை என்பதாலும் தாக்குதல் நடத்தியவர்களிடமே முறைப்பாடு செய்வதில் அர்த்தமில்லை என்பதனாலும் பொலீசில் முறைப்பாடு செய்வதில்லை என்று தீர்மானித்து கொழும்பு நோக்கி பயணிக்க ஆரம்பித்து காப்புறுதி பெறுவதில் பிரச்சனை ஏற்படும் என்பதால் பொலீசில் முறைப்பாடு செய்வதற்காக மீண்டும் யாழ் நகரிற்கு சென்றோம்.

நாம் பொலீஸ் நிலையத்திற்கு திரும்பி வருவோம் என்பதை அறியாத எம் மீதான கழிவு எண்ணெய் தாக்குதலை வழிநடத்தியவன் பெரிதாக ஏதோ சாதித்ததை போல் நின்று கொண்டிருந்தான். எம் வருகையை சற்றும் எதிர்பார்க்காத அவன் அசடு வழிந்தவாறு செய்வதறியாது நின்று கொண்டிருந்தான். பொலீசார் ஆரம்பித்திலிருந்தே எம் முறைப்பாட்டை ஏற்க பின்னடித்தார்கள். காப்புறுதியை பெறும் வகையில் மாத்திரம் வாகன கண்ணாடி உடைக்கப்பட்டது என்று முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு வலியுறுத்தினர். சம உரிமை இயக்கத்தின் சார்பில் ஏற்பாட்டாளர் தோழர் ரவிந்திர முதலிகே முறைப்பாட்டை செய்தார்.இவர் முன்னர் அனைத்து பல்க்கலைக்கழக மாணவர் பேரவையின் ஏற்பாட்டாளராக இருந்தவர் ஆவார். இராணுவ ஆட்சியை நிறுத்த கோரி பதாதை கையெழுத்திட வந்த விடயத்தை பதிவு செய்ய மறுத்தார்கள். தொடர்ந்து நாம் வலியுறுத்தி நிற்க வேறு வழியில்லாமல் பதிவு செய்தனர். முறைப்பாட்டை மீள வாசிக்கும் போது தோழர் ரவிந்திர முதலிகேயை கேட்காமலே சிங்கள பௌத்தர் என்று பதிவுசெய்திருந்தமை தெரிய வரவே அதனை கடுமையாக எதிர்த்த அவர் அதனை நீக்கி இலங்கையர் என குறிப்பிடுமாறு வலியுறுத்த, முறுகல் நிலை உருவாகியது. தான் எந்த மதத்தை சேர்ந்தவரோ எந்த இனத்தை சேர்ந்தவரோ இல்லை என்று அவர் கூறியதை பொலீசார் ஏற்க மறுத்தனர். அவ்விடத்திற்கு வந்த யாழ் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மதம் இனம் சாராது எவரும் இருக்க முடியாது எனவும் இனத்தை குறிப்பிடாமல் நீதிமன்றம் முறைப்பாட்டை ஏற்காது எனவும் தெரிவித்து சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையிலடைக்கப்போவதாக அச்சுறுத்தினான். அச்சுறுத்தலிற்கு அடிபணியாததால் சட்டையை பிடித்து அடிக்கவும் முனைந்தான். 20 ற்கும் மேற்பட்ட பொலீஸ்காரன்கள் எம்மை சூழ்ந்து நின்று அச்சுறுத்தும் பாணியில் நடந்தனர். எனினும் எதற்கும் மசிந்து கொடுக்காமல் உறுதியுடன் நின்றதால் இறுதியில் எம் வழிக்கு வரவேண்டிய நிர்பந்தம் பொலீசாருக்கு ஏற்பட்டது. எனினும் சிங்களவர் என அடையாளம் குறிப்பிடுவதை நீக்க மறுத்து விட்டார்கள். இலங்கையர் என்ற அடையாளம் பொலீஸ் சட்டங்களின் படி செல்லுபடியற்றது.

இது தான் யாழ்ப்பாணத்தின் நிலை. அரசியல் பின்னனி உடைய எமக்கே இப்படி என்றால் சாதாரன மக்களின் நிலை மிக மோசமாகவே இருக்கும். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் இதற்கு நல்ல உதாரணம். அடக்குமுறையை எதிர்க்காவிட்டால் அதனை ஒருபோதும் உடைத்தெறிய முடியாது. மிக இறுக்கமான இராணுவ சூழல் பேணப்படும் யாழ்ப்பாணத்தில் அடக்குமுறைக்கு எதிராக செயற்படுவது கடினமான காரியம் தான். ஆனால் வேறு வழி இல்லை. எதிர்த்திடாவிட்டால் அடக்கு முறை எம்மை அழித்திடும். இம்முறை தனித்து நின்று எதிர்க்க தேவையில்லை. அடக்குமுறைக்கும் இனஒடுக்கு முறைக்கும் எதிராக செயற்படவே சகல இனமக்களையும் திரட்டி போராடிடவே சம உரிமை இயக்கத்தை உருவாக்கினோம். தெற்கில் இனவாதத்திற்கு எதிராக கருத்தியல் போரை சம உரிமை இயக்கம் தீவிரமாக நடத்தும் அதேவேளை வடக்கு கிழக்கில் தீவிர வெகுஜன போராட்டங்களை முன்னெடுக்கவும் உள்ளது. எனவே இது இனஒடுக்கு முறையை உடைத்தெறிய என்றுமே கிடைத்திடாத சரியான சந்தர்ப்பம். எந்த பௌத்த பேரினவாதத்தை அடிப்படையாக கொண்டு இனஒடுக்கு முறை மேற்கொள்ளப்படுகின்றதோ, அந்த பேரினவாத தளத்தை சிதைப்பதினூடாகவே இன ஒடுக்கு முறையை நிரந்திரமாக தகர்த்தெறியலாம். அதற்கான சந்தர்ப்பம் அனைத்து மக்களின் இணைந்த போராட்டம் மூலமே கிடைக்கும். அந்த இடைவிடாத போராட்டத்தை இடைவிடாது தொடருவோம் என்ற உறுதி பொலீஸ் நிலையத்திலிருந்து வெளியே வந்த அனைத்து தோழர்களிடமும் நிறைந்திருந்தது. கொழும்பில் புறப்பட்ட போது இருந்த நம்பிக்கை யாழ்பாணத்திலிருந்து புறப்படும் போது அதிகரித்திருந்தது.















# மலையக தோட்டத் தொழிலாளர்கள் உரிமைக்காக போராட முன்வர வேண்டும்

ராசையா ஒரு தோட்டத் தொழிலாளி. ஹல்வத்துர தோட்டத்தில் வேலை செய்கிறார். 28 வயது. 3 குழந்தைகள். வழமைபோல் வேலைக்குச் செல்கிறார். அவர் வேலை செய்யும் இடத்தில் காய்ந்து இற்றுப்போன மரமொன்று இருக்கின்றது. அந்த மரத்திற்கு பட்டும் படாமலும் 33000 வாட்ஸ் மின்சார கடத்திக் கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தன. வேலை பார்க்கும் சுபவைசர் வந்து அந்த மரத்தை வெட்டும்படி ராசையாவிடம் கூறுகிறார். மின்சாரக் கம்பி இருப்பதால் அதனை வெட்டுவது ஆபத்தை வலிய அழைத்துக் கொள்வதாக இருக்கும் எனவே அதை வெட்ட ராசையா மறுத்துவிடுகிறார். தொழிலாளி தனது ஆணைக்கு கட்டுப்பட்டுத்தான ஆக வேண்டுமென்ற இறுமாப்போடு மரத்தை வெட்டாவிட்டால் வேலை தராமல் வீட்டுக்கு அனுப்பிவிடுவேன் என்று சுபவைசர் பயமுறுத்தவும் ராசையா ஒருகணம் யோசிக்கிறார், வேலையை விட்டு தூக்கிவிட்டால் தனது குடும்பம் பட்டினியால் துன்பப்படும். பிள்ளைகளின் படிப்பு நின்றுவிடும். யோசிக்கிறார். " என்ன நடந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் நீ மரத்தை வெட்டு" என்று சுபவைசர் தையிரமூட்டுகிறார். என்ன நடந்தாலும் நடக்கட்டும். மரம் என்ன தலையிலா விழப்போகிறது என்று கோடரியால் மரத்துக்கு இரண்டு வெட்டுதான் கொடுத்தார். மரம் சாய்ந்து மின்சாரக் கம்பியில் பட்டுவிட்டது. மரத்தில் கைவைத்த ராசையா ஐம்பதடி தூரத்திற்கு தூக்கி வீசப்படுகிறார். மரம் மாத்திரமல்ல அதோடு அவரது வாழ்க்கையும் சாய்ந்து விட்டது.

அவசரமாக மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட ராசையா கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். ஆனால் அவரால் எழுந்து நிற்கவோ, உட்காரவோ முடியாமல் மல்லாந்து படுத்த நிலையிலேயே இரண்டு வருடங்களாக இருக்கிறார். அவருக்கு ஊட்டுவது பருக்குவது எல்லாமே மனைவிதான். காப்புறுதித் தொகையாக அவருக்கு3 □இலட்சம் கிடைத்துள்ளது.

விபத்து சம்பந்தமாக போலிஸில் முறையிட வேண்டாமெனவும், 10 இலட்ச ரூபா நட்டயீடு வாங்கித் தருவதாகவும் அவர் அங்கத்துவ பணம் செலுத்தும் தொழிற்சங்கப் பிரதிநிதி கூறியிருக்கின்றார். ராசையாவிற்ககு 3 1/2 இலட்சம் காப்புறுதிப் பணம் கிடைத்துள்ளது. ஆனால் தொழிற்சங்கவாதி கூறியதைப் போன்று 10 இலட்ச ரூபா இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக தொழிற்சங்கப் பிரதிநிதியிடம் கேட்டபோது காப்புறுதிப் பணம் 3 1/2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதால் 10 இலட்சம் இழப்பீட்டு பணம் பெற்றுத்தர முடியாதென கூறியுள்ளார். இது தான் இன்றைய மலையக தோட்டத் தொழிலாளியின் நிலை.

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து மாதா மாதம் 240 ரூபா சந்தாப் பணம் அறவிடும் தொழிற்சங்கங்கள் தொழிலாளி விபத்தில் சிக்கிவிட்டால் அவனை அம்போ என்று கைவிட்டுவிடுவதற்கு மேற்படி சம்பவம் ஒரு உதாரணம் மட்டுமே. இப்படியான நூற்றுக் கணக்கான சம்பவங்கள் தோட்டப் பகுதிகளில் நாள்தோறும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான அநீதிகளிலிருந்து தோட்டத் தொழிலாளி பாதுகாக்கப்பட வேண்டுமாயிருந்தால். முதலில் தான் யார் என்பதை தோட்டத் தொழிலாளி உணர வேண்டும். தான் யாருக்காக, எதற்காக நாய்படாத பாடுபட்டு உழைக்கின்றோம் என்பதையும், தனது உழைப்பின் பலன் யாருக்கு போய் சேருகிறது என்பதையும் உணர வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது.

இன்றைய நிலையில் தோட்டப் பகுதியை எடுத்துக் கொண்டால், அவர்களது வாழ்க்கை நிலை படு மோசமாகவே இருக்கின்றது. ஒருபுறம் கலாச்சாரம் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதோடு, புதியதொரு கலாச்சாரம் தோட்டப் பகுதிக்குள் புகுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. 8 X 10 அறைக்குள் முடங்கிக் கொண்டு குடும்பம் நடத்திக் கொண்டிருக்கின்றான் தோட்டத் தொழிலாளி. அவனால் நீட்டி நிமிர்ந்து படுத்துத் தூங்க முடியாது. குடும்ப அங்கத்தினர்கள் அதிகம். பிள்ளைகளுக்கு படிப்பதற்கான வசதிகள் கிடையாது. வயது வந்த பெண் பிள்ளைகளுக்கு உடை மாற்றிக் கொள்ள அறை கிடையாது. அறையில் சுத்தமான காற்று வருவதற்கு வழி கிடையாது. " எட்டடி குச்சுக்குள்ளே கந்தையா எத்தனை நாளிருப்பேன். ஒருமச்சு வீடு தாருமையா மகிழ்ந்து நானிருப்பேன்" என்று ஒரு பழைய பாடல் நினைவிற்கு வருகிறது. தோட்டத் தொழிலாளி மச்சு வீடு கேட்கவில்லை. தனது குடும்பத்தோடு வாழ்வதற்கு வசதியான வீடுதான அவனுக்குத் தேவை. தோட்டப் பகுதியில் சுகாதார வசதியோ சொல்லுந்தரமன்று. பெயரளவிலான மருத்துவ மனைகள் இருந்தாலும் அங்கு தகுதிவாய்ந்த மருத்துவர்கள் இல்லை. இருக்கும் ஒருசிலரும்கூட தலைவலிக்கும் காய்ச்சலுக்கும் மருந்து கொடுக்க மட்டுமெ தகுதியானவர்களாக இருக்கிறார்கள்.

> **"படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு வேலை தேடி இளைஞர்களும் யுவதிகளும் கொழும்புக்கு வருவதை ஒரு பாஷனாக கருதுகிறார்கள்."**

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை. ஆதலால், ஓரளவு வசதி படைத்த மாணவர்கள் படிப்பைத் தேடி வெளியிடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளார்கள். இருக்கும் பாடசாலைகளில் கூட விஞ்ஞானகூட வசதிகள் கிடையாது. பிள்ளைகள் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு வேலை தேடி இளைஞர்களும் யுவதிகளும் கொழும்புக்கு வருவதை ஒரு பாஷனாக கருதுகிறார்கள். கொழும்புக்கு செல்லும் இளைஞர்கள் தமது உழைப்பை குறைந்த கூலிக்கு நாளாந்தம் விற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது உழைப்பை சுரண்டுவதற்காகவே பணமுதலைகள் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து வாய்பிளந்துக் கொண்டிருக்கிறார்ள். கொழும்புக்கு வரும் யுவதிகள் தவறான நபர்களிடம் சிக்கிக் கொண்டு அல்லாடுவதை நாள்தோறும் வரும் செய்திகள் மூலமாக அறிய முடியும். குழந்தைகளை பராமரிப்பதற்காகவும், வீட்டு வேலை செய்வதற்காகவும் குறைந்த சம்பளத்திற்கு வரும் தோட்டப்பகுதி இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆட்பட்ட சம்பவங்களும் செய்திகளாக வந்து தோட்டப்பகுதியில் சிறு சலசலப்பை ஏற்படுத்தினாலும் அது அப்படியே அடங்கிப்போய் விடுகிறது. வீட்டு வேலைகளுக்க வந்த இளம் பெண்கள் தற்கொலை செய்துக் கொண்ட சம்பவங்களும், கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் ஆங்காங்கே நடந்துள்ளன.

கொழும்புக்கு வேலை தேடி வரும் இளைஞர்கள் புதியதொரு கலாச்சாரத்தை தோட்டப் பகுதிக்குள் எடுத்துச் செல்கிறார்கள். போதை வஸ்துக் கலாச்சாரம் தோட்டப்பகுதிகளில் இன்று பரவலாகக் காணப்படுகிறது. தோட்டப்பகுதியே போதை வஸ்துக் கலாச்சாரத்திற்கு அடிமையாகி சீரழிந்துவிடுமோ என்ற அச்சம் நலன் விரும்பிகள் மத்தியில் ஏற்பட்டிருப் ஆச்சரியப்படக்கூடியதல்ல.

இவ்வளவுக்கு மத்தியிலும் தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப்பணத்தால் உண்டு கொழுக்கும் தொழிற்சங்க அரசியல் தலைமைகளும், தோட்டப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து அவர்களது வாக்குகளை கொள்ளையடித்து அரசியல் அதிகாரத்திற்கு சென்றுள்ள அமைச்சர்களும் மந்திரி பிரதானிகளும் என்ன செய்துக் கொண்டிருக்கின்றார்கள். தோட்டத்திற்கு பத்து தொழிற்சங்களை வைத்துக் கொண்டு லயத்திற்கு பத்து தலைவர்களை வைத்துக் கொண்டு ஜாதிக்கு ஒரு தொழிற்சங்கத் தலைவனையும் வைத்துக் கொண்டு தொழிலாளர்களை கூறுபோட்டு கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, தொழிலாளி தன்னைத் தானே அறிய வேண்டும். தான் தொழிலாளி, தனக்கு ஜாதியில்லை, மதமில்லை, இனமில்லை, மொழியில்லை, குலமில்லை என்று எப்போது உணர்கின்றானோ அதுவரை அவனுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கப் போவதில்லை. குறுகிய சிந்தனையோட்டத்திலிருந்து விடுதலை கிடைக்கப் போவதில்லை. சிறந்ததொரு வாழ்க்கை கிடைக்கப் போவதில்லை. அதுவரை போலி தொழிற்சங்க அரசியல் தலைவர்கள் நீங்கள் சுரண்டப்படுவதையும் சீரழிக்கப்படுவதையும் தடுக்க முடியாது. ஆகவே தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, அனைத்து துறைகளையும் சார்ந்த தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து ஓரணியில் நின்று அநீதிக்கும், அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக போராடாத வரை தொழிற்சங்கவாதிகளும், அரசியல்வாதிகளும், முதலாளிகளும் தொழிலாளர்களை மிதித்துக் கொண்டுதான் இருப்பார்கள்.



# ஊரான் ஊரான் தோட்டத்திலே ஒருத்தன் வைச்சான் வெள்ளரிக்கா

காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி
காகிதம் போட்டான் வெள்ளக்காரன்

தன் கரங்களால் நாட்டி நீர்ப்பாய்ச்சி பராமரித்து விளைச்சலாக்கும் சாதாரண வெள்ளரிக்காய் பிஞ்சின் மேல்கூட அவனுடைய உழைப்புடனோ அல்லது நிலத்துடனோ சம்பந்தப்படாத வேற்று நாட்டவன் முழுஅதிகாரத்தையும் கொண்டுள்ளான் என்ற அவலத்தை அச்சொட்டாகச் சொல்கின்ற இந்த சொற்கோவைகளை அந்த உழைப்பாளியின் வேகும் மனதுக்குள் புகுந்து படம் பிடித்துக் காட்டுகின்ற இந்தக் கலைஞன் யார் ? அதுமட்டுமல்லாமல் உழைக்கும் மக்களின் சொந்த மொழிவழக்கிலேயே தோய்ந்தெழுந்து பிறப்பெடுத்த அவ்வுணர்வுகளை அந்தக் கலைஞன் மீண்டும் உழைக்கும் மக்களுக்கே செய்தியாக்கி அழகிய பாடலாக அவர்களுக்கே வழங்குகின்றானே அந்தக் கலைஞன் எப்பேர்பட்டவன்?

இலட்சோப இலட்சம் அடித்தட்டு மக்களுக்கு,கஷ்டப்பட்டு வாழ்க்கையில் போராடும் மக்களுக்கு கலைஞன் கலை வடிக்கிறானா? அவர்களது வாழ்வின் அவலங்களை துன்பங்களைத் துயரங்களை, உழைப்பை வியர்வையை அடிமைநிலையை தனது படைப்பில் வெளிக்கொணர்ந்து அவர்களில் ஒருவனாகிறானா அவனே தான் மக்களுக்கான கலைஞன்.

மக்களை கேளிக்கைகளுக்குள் அமிழ்த்தி மூழ்கடித்து அவர்களது சிந்தனைகளை அவர்களது உணர்வுகளை திசைதிருப்பும் கலை, மழுங்கடிக்கும் கலை. போதைப்படுத்தும் கலை. பொழுதுபோக்கும் கலை. மக்களை அவர்களது நடப்பு வாழ்விலிருந்து மயக்கும் மருந்து. உழைப்போர்களது பிரச்சனைகளிலிருந்து அவர்களது சிந்தனைகளை திசைதிருப்பி விடுவதில் யாருக்கு நன்மையோ அவர்களுக்காக கலை வடிவங்களை பண்பாடுகளை சிருஷ்டிக்கின்றனரே அந்தக் கலைஞர்கள் மக்களின் அடிமைநிலையைப் பேண விரும்பும் ஒடுக்குவோரின் மேல் கட்டுமானத்தைக் கட்டிக் காப்பவர்கள்.

மக்களை மயக்கி வைத்திருக்கும் மகுடிக் கலைகளை இன்றைய பெரும்பாலான சினிமாக்கள் தொடங்கி தொடர்நாடகங்கள் வரை கண்ணும் கருத்துமாக செய்து வருகின்றன.

மேல்நிலை மாந்தரின்கலாச்சாரங்கள் பண்பாடுகளை அலங்கரிப்பதற்கு படைக்கப்படும், பிரமாண்டமான பொருட்செலவிலும், பட்டிதொட்டியெல்லாம் சென்றடையும் தொழில்நுட்ப வீச்சுகளிலும் தயாரிக்கப்படும் கலை இலக்கிய படைப்புக்குள் வீழ்த்தப்படுவது மக்களது மனங்கள் மட்டுமல்ல, அவர்களது உழைப்போடு பின்னிப்பிணைந்த கிராமிய கலை வடிவப் பொக்கிசங்களும் தான்.

உலகமயமாதல் வியாபாரத்தில் திறந்த சந்தையானது நுழைய முன்னர் அங்கு ஏற்கனவே இருக்கின்ற உள்ளூர் கலாச்சாரத்தை அழித்து அதற்குப் பதிலாக நுகர்வுக் கலாச்சாரத்துக்கு மக்களை தயார்ப்படுத்த சர்வதேச மூலதனத்துக்கு முன்னமேயே உள்ளே நுழைவது, மக்களைப் பதப்படுத்த கையில் எடுக்கப்படுவது கலை இலக்கியங்களின் பாய்ச்சலே. கிராமிய உள்நாட்டுக் கலைவடிவங்களை அகற்றியோ சிதைத்தோ அவற்றுக்குப் பதில் கலை கலாச்சாரப் பண்பாட்டுத்தளங்களில் மக்களை இசைவிக்கும் வகையில்முதன் முதலில் கைவைப்பார்கள். தமக்கேதுவான கருத்துக்களையும் பண்பாட்டு மாறுதல்களையும் உட்புகுத்தி கலைகள் படைக்கப்படும். இளையராஜா இசைக்கும் ஏ.ஆர் ரகுமான் இசைக்கும் இடையில் இருக்கின்ற வேறுபாடே இதுதான். உலக அழகிகள் கீரிடம் இந்திய பெண்களுக்கு வழங்கப்பட்டது ஒன்றும் தற்செயலானதல்ல. சர்வதேச முதலீட்டின் வருகைக்கான கலாச்சார தடைகளைத் தகர்த்து நுகர்வுக் கலாச்சாரத்துக்கு தோரணம் கட்டுவதற்குத் தான்.

வாழ்வில் அல்லல்படும் அடிநிலை மக்களே மயங்கி மாய்ந்து போகுமளவுக்கு அவை எங்கும் சென்றடைவதற்கான பலம் கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டின் இனக்குழுமத்தின் கிராமத்தின் தொன்மையான கலைவடிவங்கள் காணாமல் போய்விடுகின்றன. நுகர்வினை ஊக்குவிக்கும் கலாச்சாரத்தை உருவாக்கும் நவீன கலை இலக்கியங்கள் எங்கும் வீச்சுடன் பரப்பப்படுகின்றன.

இந்த மேன் மக்களது “வாழ்வு இலட்சணங்களை” அவர்களது செழிப்புகளை தம் உழைப்பால் உருவாக்கும் உழைப்பாளிகளோ கிடைநிலை மாந்தர்களாக இழிவுக் கலாச்சாரங்களில் உழலுபவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். மக்களாலேயே உருவாக்கப்பட்டு மக்களது வாழ்வில் பின்னிப்பிணைந்து போய்விட்ட உயிரோட்டமான கலைகள் அவை நடனம் நாடகம் இசை கூத்துக்கள் என எவையாயிருப்பினும் தரக்குறைவானதாக தாழ்த்தப்படுகின்றது. நாடகங்கள் கூத்துக்கள் வில்லுப்பாட்டு நடனம்,

> **இந்த மேன் மக்களது 'வாழ்வு இலட்சணங்களை" அவர்களது செழிப்புகளை தம் உழைப்பால் உருவாக்கும் உழைப்பாளிகளோ கிடைநிலை மாந்தர்களாக இழிவுக் கலாச்சாரங்களில் உழலுபவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள்.**

ஆட்டம் பாட்டம் என மக்களாலேயே சொந்தமாக நிகழ்விக்கப்பட்டு வந்த இந்தக் கலைகள் இருந்த இடத்தினை, இன்று ஆக்கிரமித்து இருக்கும் இணைய வழி சினிமா மற்றும் தொடர் நாடகங்கள் மற்றும் ஊடகங்கள் என்ன பேசுகின்றன? மக்களின் நாளாந்த வாழ்விலிருந்து விலத்தி நின்று இந்த ஊடகங்களின் இலாப நோக்குக்கும் அதனை ஆட்டிப்படைக்கும் மூலதன அதிகார அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கும் ஏற்றவாறு காட்சிகள் கருத்துக்களோடு மக்கள் எண்ணங்களைத் திசைதிருப்பும் சங்கதிகளோடு தாண்டவமாடுகின்றன.


இந்த மண்ணில் எதனையும் செய்யாமல் மாடிகளையும் கோடிகளையும் அநுபவிப்போருக்கு அவர்களது கலாச்சாரத்தை பண்பாட்டை கேளிக்கைக் கலையாமெனப்படைப்பவர்களை எவ்வகைக் கலைஞர் என்பது? இவற்றையே ஓய்வின்றி இடைவிடாது படைக்கும் கலைஞன் எதற்காகப் படைக்கின்றான்? இவன் எந்த வகைப்பட்டவன்?

உழைத்து, ஓய்ந்து, களைப்பிலிருந்து மீளவும், கூட்டுழைப்பில் மகிழவும் சமூக அநீதிகளைச் சாடவும் கிளர்ச்சி செய்யவும் அழைக்கும் கலைப்படைப்புக்களை, அவர்களது சூழ்நிலைக்கு வெளியில் ஒரு கலைஞன் வாழ நேர்ந்தாலும் கூட அவர்களது உணர்வுகளோடு ஒன்றி உள்வாங்கி மக்களிடமிருந்தே கற்று மீள மக்களுக்காகவே படைப்பானாயின் அவன்அந்த மக்களுக்கான ஒரு போராளி.

ஏனெனில் அவனது படைப்புக்கள் போராட்டத்தை கிளர்ச்சியைத் தூண்டுவன. இருக்கும் சமுதாய அமைப்பைப் பாதுகாக்க அந்தக் சமூக அமைப்பினை மீறி மக்களை சிந்திக்காவண்ணம் முடக்கி வைக்கும் ஒடுக்குமுறைக்கரங்கள் இந்த மக்கள் கலைஞர்கள் மீது பாய்ந்தேயாகும்.

ஒடுக்கப்படும் மக்கள் கூட்டத்தின் கலையம்சங்கள் அநீதிகளைப் பேசுபவை. தங்களது வாழ்வின் துயரங்களைப் பேசுபவை. மக்கள் கலைவடிவங்களை வரித்துக்கொண்டு அதனை ஆக்ரோசமான எதிர்ப்புக்குரலாக கலைவடிவங்களில் அவற்றை உழைக்கும் மக்களின் நெஞ்சங்களில் விதைக்கும் கலைஞன் போராடும் மக்களது தோழனாகின்றான். மக்களை மயக்குவது அவனது கலையல்ல. எழுச்சியை மக்களது விழிப்புணர்வை கலைவடிவங்களில் அவன் தாங்கி வருகின்றான் அந்த மக்களின் இயல்பான சொந்த கலைவடிவங்களூடாகவே அவை வெளிப்படுகின்றன. இந்த மக்கள் கலைஞன் தன்னை கலைஞன் என்பதை விட போராளியாகவே வெளிப்படுத்துவான். தனது கலைத்திறமையை அது ஒரு போராட்டக்கருவி என்பதற்கு மேல் அவன் அதற்கு பெறுமதி வழங்குவதில்லை. கலைஞர்கள் கலை கலைக்கானது என்று அவர்கள் கோசமிடமாட்டார்கள். கலை என்றுமே மக்களுக்கானது

**தொடர்ச்சி 14ம் பக்கம்**



# முள்ளிவாய்க்காலின் தோல்வியும், படிப்பினையும்






இலங்கையில் தொடருகின்ற இன ஒடுக்குமுறைக்கும், இன அழிப்புக்கும் எதிராக வாக்குப்போடுவதன் மூலமும், அமெரிக்காவை நம்புவதன் மூலமும் அவற்றைத்தடுத்து நிறுத்த முடியுமா? இப்படி செயற்படும் எமதுஅரசியல் சரியானதா? இதில்முள்ளிவாய்க்கால் வரை நம்பிய அரசியல் ஏன் தோற்றுப் போனது என்பதைத் தெரிந்துகொண்டால், நாம் நம்பும் அரசியலின் தோல்வியையும் தெரிந்துகொள்ள முடியும்.அத்துடன் நாம்எப்படிப் போராடவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளவும் முடியும்.

நாம் எப்படிப் போராடக் கூடாதோ, அதற்கொரு உதாரணந்தான் முள்ளிவாய்க்கால். அத்துடன் இந்தப் போராட்டம் தோற்கடிக்கப்படும் என்பதை 1980 முதல் 2009 வரை முன்கூட்டியே சொன்னவர்கள், எப்படிப் போராடவேண்டும் என்பதையும் முன்வைத்தனர். அவை யாவும் புறக்கணிக்கப்பட்டன. மாறாகமுள்ளிவாய்க்கால் வரையான போராட்டம் எந்தத் தீர்வையும் பெற்றுத் தரவில்லை. மனித அழிவையும், சொத்தழிவையும், சமூகச் சீரழிவையுந்தான்அது தந்தது. தொடர்ந்தும் சமூகமாக இருக்கும் அடிப்படையைத் தகர்த்தும் வருகின்றது. இதைப்பரிசாகத் தந்த முள்ளிவாய்க்கால் அரசியல்தான் என்ன? அதன் படிப்பினைதான் என்ன?

இன்று சிறுபான்மை இனங்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறையும், இன அழிப்பும் தொடர்கின்ற நிலையில், அது நாட்டின் முழுமக்கள் மேலான சர்வாதிகாரமாக மாறிவருகின்றது. இதிலிருந்து எவரும் தப்பிவாழமுடியாதவண்ணம் அரசு இயங்குகின்றது. இதையின்று நாம்எதிர்கொள்வது எப்படி? நடந்த போராட்டம் தொடர்பாகவும், அதன் தோல்வி குறித்த படிப்பினையையும் கற்றுக்கொள்வதில் இருந்துதான் எம் மீதான ஒடுக்குமுறையை நாம்வெற்றிகரமாக எதிர்கொள்ளமுடியும்.

கடந்தகால குறுந்தேசிய அரசியல்தான், முள்ளிவாய்க்காலில் தோற்பதற்கான முழுமையான காரணமாகும். இதை நம்மில் பலர் தெரிந்து கொண்டுள்ளோமா? அத்துடன்மற்றைய எல்லாக் காரணங்களும், இந்தத் தவறான குறுந்தேசிய அரசியல் மேல் வெற்றிகரமாக செயற்பட்டவைதான்.

இந்தக்குறுந்தேசிய அரசியல் என்பது, தன் சொந்த ஒடுக்கப்பட்ட மக்களை நம்பவில்லை. அவர்கள்மக்களின் சொந்தப் போராட்டத்தை மறுத்தனர். அதனைக் குழுக்களின் போராட்டமாக்கினர். தனிப்பட்ட சிலரது நலனை முதன்மைப்படுத்தினர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் சமூகப் பிரிவுகளுக்கும் எதிராக, ஒடுக்கும் பிரிவைச் சார்ந்து நின்றனர். இப்படிமக்களை மந்தையாக்கியதன் மூலம், தம்மை வழிபட வைத்தனர். அதேநேரம் அன்னிய சக்திகள் மூலமாக, பணத்தின் மூலமாக, ஆயுதங்கள் மூலமாக விடுதலை கிடைக்குமென மக்களைநம்பவைத்தனர். இதற்காக மக்களைப் பலியிட்டனர். இப்படிமற்றவர்களைக் கொன்றதன் மூலம், எதிரியின் பின் அவர்களை அணிதிரள வைத்தனர். முஸ்லீம் மக்களை எதிரியாகக் காட்டி ஒடுக்கியதன் மூலம், தமிழ் மக்களுக்கு எதிராக இருக்குமாறு பார்த்துக் கொண்டனர். சிங்கள மக்களை தமிழ் மக்களின் எதிரியாக காட்டியதன் மூலம், சிங்கள மக்களை அரசின் பின் அணிதிரளுமாறு கோரினர். எல்லையோர மக்களைக் கொன்றதன் மூலம், அவர்களைக் கொண்டு தமிழ்மக்களைச் சுற்றி வளைக்குமாறு பார்த்துக் கொண்டனர்.இப்படி மனிதவிரோத செயல்களைச் செய்தும், சொந்த மக்களையே ஒடுக்கியும், சர்வதேசரீதியாகவும் தம்மைத்தாமே தனிமைப்படுத்திக்கொண்டனர். இப்படித்தான் குறுந்தேசியம்,முள்ளிவாய்க்காலில் தனது சொந்தப் புதைகுழிக்குள் வீழ்ந்து மடிந்தது.

மற்றும்,இன்னொரு இன மக்களுக்கு எதிரான போராட்டமல்ல தேசியம். ஆனால் குறுந்தேசியமோ இன்னுமொரு இனத்துக்கு எதிரான போராட்டமாக அதைக் காட்டியது. சிங்கள இனத்துக்கு எதிரான, முஸ்லீம் மக்களுக்கு எதிரான தமிழன் போராட்டமாக அதைக் காட்டியது. இது மட்டுமல்ல பிரதேச, சாதி மேலாதிக்க சக்திகளின் நலன்சார்ந்த போராட்டமாக அதைக் குறுக்கியது.

ஒடுக்கப்பட்ட வர்க்கங்களினதும், ஒடுக்கப்பட்ட சமூகங்களினதும் போராட்டமாக தேசியப் போராட்டம் நடைபெறுவதைத் தடுத்து, ஒடுக்கும் வர்க்கத்தின் நலனை முன்னிறுத்தி அதை தேசியமாகக் காட்டியது. இதன் மூலம் எதிரியைப் பலப்படுத்தும் எல்லாவிதமான மக்கள்விரோதச் செயலையும் செய்தது. எதிரியின் மனிதவிரோத செயலை மிஞ்சும் வண்ணம், மக்களை ஒடுக்கியதன் மூலம் தமிழ்மக்களை முதலில் தோற்கடித்தது.

இதற்கு ஏற்ப தன் தேசிய அரசியலை துறந்த பின்னணியில், தேசிய நலனென்று ஒன்றையும் அது முன்னிறுத்தவில்லை. சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான யுத்தத்தை மட்டும் முன்னிறுத்தி, அதை தேசியம் என்றது. ஆனால் அதுவோ இனவழிவு யுத்தமாகியது.

அதுசமாதானம் மீதான மக்களின் கோரிக்கைகளை மறுத்தது. இனவாத இனவழிப்பு யுத்தத்தை மக்கள் மேல் திணித்தது. அவர்களின் குழந்தைகளை யுத்தத்தில் பலிகொடுத்தது. இதற்காகப் பலாத்காரமாக குழந்தைகளை இழுத்துச் சென்றவர்கள், பிணத்தைக் கொண்டு வந்து காட்டினர். இறுதியாக மக்களை பணயக் கைதியாக்கி, அவர்களையும் பலியிட்டனர். பிணத்தைக் காட்டி பிரச்சாரம் செய்து, தாம் தப்பிப்பிழைக்க முனைந்தனர். இறுதியாக தம்சொந்த இயக்கவிதிக்கு முரணாக அவர்களே துரோகமிழைத்தபடி சரணடைந்தனர்.

இந்தக்குறுந்தேசிய அரசியல் என்பது 1980 முதலே மக்களுக்கு எதிராக இருந்தது. ஆயுதத்தை நேசித்தவர்கள், மக்களை நேசிக்கவில்லை. பணத்தை மதித்தவர்கள், மக்களை மதிக்கவில்லை. அன்னிய சக்திகளை நம்பியவர்கள், மக்கள் சக்தியை நம்பவில்லை. எதிரியை உற்பத்தி செய்தவர்கள் நண்பர்களை உருவாக்கவில்லை.

மக்களுக்காக தாம் போராடுபவர்கள் என்று கூறிக்கொண்டு,இவர்கள்மக்களுக்கு வெளியில் மக்கள் விரோத குழுவாக இயங்கினர். இவர்கள்தனிநபரை மையப்படுத்தி, தனிமனித வழிபாடு தான்இவர்களின் போராட்டமாகியது. இதுவே அரசியல் அளவுகோலாகியது. இதில்தனிநபர் சார்ந்த மிகை விம்பத்தை முன்வைப்பது தேசியமாகியது. இச்சமூகத்தில் நிலவிய முரண்பாடுகளை ஒடுக்குவதே அதன்தேசியக் கடமையாகியது. இப்படித்தான் குறுந்தேசியம் என்பது தேசியத்தை மக்களிடமிருந்து தோற்கடித்தது

அத்துடன்ஒரு குழுவின் சொந்த நலன்சார்ந்த போராட்டம், தேசியப் போராட்டமாக காட்டப்பட்டது. இதனிடத்தில் தனிநபர் நம்பிக்கை, விசுவாசம், வழிபாடு, இயக்கவாதம்...,என்னனதேசியமாக இரகசியமாக சதியாக பொய்யாக நேர்மையீனமாக வன்முறைமாக அவதூறுகளாக.., இவைகளே இவர்களின்தேசிய அறமாக எஞ்சியது. இதை வைத்துப் பிழைத்துக் கொள்ளும் எல்லா வகையான சந்தர்ப்பவாதிகளும் இதைச் சூழ்ந்துகொண்டு, இதை தங்கள் வியாபாரமாக்கினர். இப்படித் தேசியத்தைக் குழிவெட்டிப் புதைத்தவர்கள், போராட்டத்துக்கான அடிப்படைகளை இல்லாதாக்கி மக்களைத் தோற்கடித்தனர். மக்கள் தமக்காகத் தாம் போராடாததும், அரசியலற்ற குறுந்தேசிய வெற்றுடலைத்தான், அரசு மிக இலகுவாகத் தோற்கடித்தது. இதுதான் முள்ளிவாய்க்காலில் நடந்து முடிந்த கதை.

இந்த அரசியலின் தோல்வியை 1980களிலிருந்து சொன்னபலரைக் கொன்றனர். ஆனால் அதைத் தொடர்ந்து 2009வரை முன்கூட்டியேஇத் தவறுகளைத் தட்டிச் சொன்ன போதும் இவர்கள்அவற்றைக்கண்டு கொள்ளவில்லை.இப்படிவீங்கி வெம்பியதை நம்பியவர்கள், அதைப் போராட்டமாக முன்னிறுத்தியவர்கள் தான், முள்ளிவாய்க்காலில் தம்மைத் தாமே தோற்கடிக்கும் வரை வழிபட்டனர்.

இதில்மக்கள் தமக்காகத் தாமே போராடவேண்டும் என்பதை இவர்கள் நிராகரித்ததன் மூலம்,இதனைத் தோற்கடித்ததன் மூலம், தம்மைத் தாம் தனிமைப்படுத்தித் தோற்கடித்தனர். மக்களை அணிதிரட்டும் வண்ணம்,மக்களின் நலனை முன்னிறுத்தி இவர்கள் போராடவில்லை. இவர்களால் மக்கள் தமக்காகத் தாம் போராடவில்லை. இதனால் சொந்த மக்களுக்கு எதிரானதாகஇவர்கள் மாறியதன் மூலம்இப் போராட்டம்தோற்கடிக்கப்பட்டது.

இன்றும் இதுதான் தொடருகின்றது. மக்கள் தாமாகப் போராடுவதற்கு குறுந் தேசியம் வழிகாட்டவில்லை. இனவொடுக்குமுறை, இனவழிப்பும் தொடரும் நிலையில், அதை உணரும் மக்களை போராடுவதற்கு வழிகாட்டுவதா அல்லது அதிலிருந்து அவர்களை அன்னியப்படுத்திவிடுவதா ஒரு சரியான அரசியல்?


இவர்கள்மக்களை பார்வையாளராக்கி விடுவதன் மூலம், மீட்பாளர்கள் பற்றிக் கனவு காணவைக்கும் அதே குறுந்தேசிய அரசியல்தான் இன்றும் தொடருகின்றது. எமக்கு வாக்குப்

தொடர்ச்சி 14ம் பக்கம்

# கொல்லவரும் கூடன்குளம் அணுஉலைகள்

தென்னிந்தியாவின் கிழக்குகரையோரத்தில் கூடன்குளம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் அணு உலைகள் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. கூடங்குளத்தை அண்மித்த பிரதேசங்களிலும் தென்னிந்தியாவிலும் கூடன்குளம் அணுஉலைக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. இலங்கையிலும் கூடன்குளம் அணுஉலைக்கு எதிரான பிரச்சாரங்கள் மெல்ல மெல்ல வலுப்பெற்று வருகின்றன. இவற்றிற்கு மத்தியில் கூடங்குளத்தில் நிர்மாணிக்கப்படும் இரண்டுஅணு உலைகளில் ஒன்றின் நிர்மாணப்பணி நிறைவிற்கு வந்துள்ளமை பெரும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அணு என்றால் மேலும்




பிரிக்கமுடியாதது என்று அர்த்தம். ஒரு பொருளை மேலும் மேலும் பிரிக்கும் போது,ஒரு கட்டத்தில் மேலும் பிரிக்கமுடியாத கண்ணுக்கு தெரியாத சிறு துணிக்கை பெறப்படும். இவ் கண்ணுக்கு தெரியாத மேலும் பிரிக்கமுடியாத சிறு துணிக்கையே சகலதையும் உருவாக்கும் அடிப்படை அலகான அணு ஆகும். இவ் அணுவை சில தொழில்நுட்பங்களைபயன்படுத்தி பிளக்கும் போதுபெருமளவிலான அழுத்தசக்தியும்,கதிர்வீச்சும்,வெப்பமும் வெளிவரும் என ஐன்ஸ்டின் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். யுரேனியம்,தோரியம் போன்ற சில மூலகங்களின் அணுக்களை பிளக்கும் போது வெளிவரும் ஆற்றல் மிக அதிகமானதாகும். இவ்வாறு அணுவை பிளக்கும் போது வெளிவரும் ஆற்றலை நாசகார அழிவை ஏற்படுத்தும் ஆயுதமாகப்பயன்படுத்துவதே அணுகுண்டாகும். அதே அணுப்பிளவை பாரிய அணு உலை ஒன்றினுள் சிறிது சிறிதாக நிகழசெய்து வெளிவரும் ஆற்றலை கட்டுபடுத்திகளைபயன்படுத்தி மட்டுபடுத்த 'பயன்படுத்தின் மூலம் மின்னுற்பத்தி செய்தல் அணுஉலையினுள் நடைபெறும்.

அணுபிளவின் போது வெளிவரும் கதிர்வீச்சு மிக அபாயகரமானதாகும். அவ் கதிர்வீச்சின் தாக்கத்திற்குள்ளானால் மரணம் ஏற்படும்,புற்றுநோய்க்கு ஆளாகநேரிடும். நுரையீரல் வீக்கம்,எலும்பு மூட்டுக்கள் தேய்வடைதல்,பரம்பரை அலகுகள் பாதிப்பிற்குள்ளாதல்,பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகபிறத்தல்,விகாரமான குழந்தைகள் பிறத்தல் எனஏராளமான கேடுகளை கதிர்வீச்சு உருவாக்கும். மிருகங்கள் கூட இந்தபாதிப்பிலிருந்துதப் பிபிழைக்கமுடியாது.

இவ்வாறான ஆபத்தான கதிர்வீச்சை வெளிவிடும் அணுஉலைகளே கூடன்குளம் பிரதேசத்தில் அமைக்கப்படுகின்றன. அணு உலைகளிலிருந்து வெளிவரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கதிர்வீச்சின் பாதிப்பின்காரணமாக அணுஉலைகள் அமைக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்திற்குள் பாதுகாப்புகவசமணிந்த அணுஉலை ஊழியர்களை தவிர வேறுயாரும் உட்ச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் குடியிருப்புக்கள் அமைக்கப்படல் தடைசெய்யப்பட்டிருக்கும். 18 கிலோமீற்றர் தூரம் தொடர்ந்து கண்கானிக்கப்படும்.கூடன்குளத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான தூரம் 225 கிலோமீற்றர்கள் தான். 450 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள் முழு இலங்கையும் உள்ளடங்கிவிடும். அத்துடன் கூடன்குளம் கரையோரத்தில் அமைந்துள்ள பிரதேசம். ஆகவே கடல் மூலம்,காற்றின் மூலம்,மீன்களின் மூலம்,பறவைகள் மூலம் மிக இலகுவாக,அணுஉலைகளிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு இலங்கையின் பக்கம் கடத்தப்படலாம். கூடன்குளம் பிரதேசம் காற்றின் வேகம் கூடிய வங்காளவிரிகுடா பிரதேசத்தில் அமைந்திருக்கின்றது. ஆகவேகாற்றின் மூலம் இலகுவாக கடத்தப்படலாம். கூடன்குளம் அணுஉலைகளில் பயன்படுத்தப்படும் நீர்கடலிற்குள் விடப்படும். அணுஉலைகளிலிருந்து வெளிவிடப்படும் கதிர்வீச்சுடைய நீரினால் கடலும் கடல் வாழ் உயினங்களும் கதிர்வீச்சுதாக்கத்திற்குள்ளாகும். இது இலங்கையின் மேற்குகரை வாழ் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஒவ்வொருவருடமும் இலங்கைக்குவந்து செல்லும் கோடிகணக்கான பறவைகளில் பெரும் எண்ணிக்கையான பறவைகள் கூடன்குளம் பிரதேசத்தினூடாகவே வந்து செல்கின்றன. இவ் பறவைகள் சிறிய அளவிலான கதிர்வீச்சை இலங்கைக்கு காவி வந்ததென்றால் நாமும் கதிர்வீச்சுதாக்கத்திற்குள்ளாக வேண்டிவரும்.

கூடன்குளம் அணுஉலைகள் அமைக்கப்பட்டால்,மேற்சொன்ன பாதிப்புகளுக்கு நாம் முகம் கொடுத்தே ஆக நேரிடும். இதற்கும் மேலாக அணுஉலையில் சிறு விபத்து நிகழ்ந்தாலும் வெளிவரும் கதிர்வீச்சு நொடிபொழுதில் ஏராளமானவர்களை


**தொடர்ச்சி 15ம் பக்கம்**

# வடபகுதியின் மீன்பிடி அபிவிருத்தி சிறு வரலாற்றுப் பார்வை

இலங்கைக்கு பாரிய கடற் பிரதேசம் இருந்தும், இலங்கையின்றுவரை மீன்பிடியில் எந்தவகையிலும் அபிவிருத்தியடைந்த நாடல்ல. மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்கான முதல் அடித்தளம் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் (1972 - 1977) பதவிக்காலத்தில் இடப்பட்டது. இக்காலப் பகுதியில் மீன்பிடி கூட்டுறவு சங்கங்களும், அகில இலங்கை மீன்பிடி தொழிலாளர் சமாசமும் உருவாக்கப்பட்டது. ஐந்தாண்டு திட்டம் தீட்டப்பட்டு, அத்திட்டத்தில் முதல் இரண்டாண்டுகள் கரையோர மற்றும் களப்புசார் மீன்பிடியை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டது. இதன் அடிப்படையில் இலகு கடன்கள் மீன்பிடிகூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக வழங்கப்பட்டது. இக்கடன்கள் வடக்கு-கிழக்கில் உபயோகிக்கும் மரவள்ளங்களையும், தெற்கில் பாவிக்கும் கட்டுமரங்களையும், வலைகளையும் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள வழங்கப்பட்டது.

அதன்பின் பதவிக்கு வந்த யூ.என். பி.அரசு தனது திறந்த பொருளாதாரக் கொள்கைக்கேற்ப சிறிமாவோ பண்டாரநாயக்காவின் திட்டத்தை சிலமாற்றங்களுடன் நடைமுறைப்படுத்தியது. மீன்பிடித் தொழிலை ஜப்பான் நாட்டின் உதவியுடன் நவீனப்படுத்த, அந்நாட்டின் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டது.

இவ்வாறு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஜப்பான் நாடு தனது கடல்சார் தொழில் நுட்பத்தை இலங்கையில் சந்தைப்படுத்தும் தனியுரிமையை தனதாக்கிக்கொண்டது. அத்துடன் இலகு கடன் மூலம் ஜப்பானிய நிறுவனங்கள் சிறுவள்ளங்களுக்கும், கட்டுமரங்களுக்கும் பயன்படும் வெளியிணைப்பு இயந்திரங்களை மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக வழங்கியது. அத்துடன் உள்ளிணைப்பு இயந்திரங்களைக் கொண்ட கரைகடந்து தொழில் செய்வதற்கான நவீன படகுகளை தனியார் வங்கிகளின் உதவியுடன் கட்டுவதற்கான ஊக்குவிப்பும் அரசினால் வழங்கப்பட்டது. இதனைச் சரியாகப் பயன்படு .இதற்கான முக்கிய காரணிகளாக பின்வருவனவற்றை கூறலாம்.



1. தெற்குடன் ஒப்பிடுகையில் வடக்கின் பொருளாதாரம்சி றிமாவோ காலத்தில் இருந்தே மிகநன்றாக இருந்தது. அத்துடன் சேமிப்பு பழக்கத்துடன் இணைத்த தனிநபர்களுக்கிடையிலான வட்டிக்கு வழங்கும்முறை, இலகுவாக கடன் பெற்று தொழில் நடத்த வகைசெய்தது.

2. பலநூறு வருடங்களாக வடபகுதியைச் சேர்ந்த சில கிராமத்தவர் மரப்படகு கட்டும் தொழில்நுட்பமும், அனுபவமும் கொண்டவர்களாக இருந்தமை. (இவர்கள் தம் பிற்காலத்தில் யா-ஏல, மற்றும் நீர்கொழும்பு பகுதியில் மரப்படகு கட்டும் தொழிலைசி ங்களதொழிலாளர்களுக்கு கற்றுக்கொடுத்தார்கள்)

3. நோர்வேயினால் அறுபதாம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சீ-நோர் நிறுவனம் காரைநகரிலும், குருநகரிலும் வலையுற்பத்தி மற்றும் கண்ணாடிநார் இழைப்படகு உற்பத்திகளை மேற்கொண்டது. இதனால் மலிவு விலையில் தொழிலாளர்கள் மேற்கூறிய உபகரணங்களை பெறமுடிந்தமை. (இந்நிறுவனம் பிற்காலத்தில் அரசமயப்படுத்தப்பட்டு, அதன் தொழில் நுட்பம் தெற்கில் படகுகள் தயார் செய்ய உபயோகிக்கப்பட்டது. இந்தசந்தர்ப்பத்திலும் காரைநகர் தொழில் நுட்பவியலாளர்களும் தொழிலாளர்களும் தென் இலங்கையர்க்கு தொழில் நுட்பத்தை பழக்கினர். தென்பகுதியில், குறிப்பாக யா-எல பகுதியில் உருவாக்கப்பட்ட கண்ணாடிநார் இழைப்படகுகளை தமிழ் இயக்கங்கள் பயன்படுத்தின. அப்படகுகள் காரைநகர் படகுகளைவிட ஆழ்கடல் அலை அடிப்பை தாங்கக்கூடியவை. காரைநகர் படகு உற்பத்தி புளட் இயக்கக் கொள்ளையினால்நி றுத்தப்பட்டது. குருநகர் வலை உற்பத்தி நிறுவனம் புளட் இயக்கத்தாலும், புலிகளாலும் கொள்ளையிடப்பட்டதால் நிறுத்தப்பட்டு, வலையுற்பத்தி கொழும்புக்கு மாற்றப்பட்டது.

4. மீனின் பிறப்பும் வளர்ச்சியும் கடலடித்தள மேடை என்று சொல்லப்படும் ஊழவெநைவெயட ளாநடக, ஆழ்கடலுக்கும் பரவைகடல் ∴களம் ∴ களப்பு கடலுக்கும் இடையிலான பகுதியிலேயே நடைபெறுகிறது. இலங்கையின் பெரும் பகுதி கடலடித்தளமேடை மன்னாருக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. இதன்நீளம் 480 கிலோமீற்றராகவும் அகலம் 22 கிலோமீற்றர் இல் இருந்து 60 கிலோமீற்றர்வரை உள்ளது. ஆகவே இப்பகுதி உள்ளக அளவில் ஒப்பிடக்கூடிய மீன் உற்பத்தியாகும் பிரதேசமாகவுள்ளது. (இந்தியாவின் இரண்டாவது பெரிய கடலடித்தளமேடை கேரளா கரையோரம் உள்ளது. அதனால்தான் கேரளம் மிகமுக்கிய மீன்பிடி பிரதேசமாகவுள்ளது.) இவ்வாறு இயற்கையாகவே மீன் உற்பத்தியாகும் பிரதேசத்தின் அருகில் வடபகுதி மீனவர்கள் சீவிப்பதால், அவர்களால் அதை அனுபவிக்க முடிந்தது.

5. வடபகுதியில் பிடிபடும் மீன் தென்பகுதியில் மிகவாக விரும்பப்படுகிறது. இதனால் அங்கு நல்ல விலையுடன் சந்தைவாய்ப்பும் கிடைத்தது அத்துடன் பதனிடப்பட்ட வடபகுதி மீனுக்கும் சந்தை வாய்ப்பும் வரவேற்பும் இருந்ததால், வடபகுதியில் பிடிக்கப்பட்ட மீன்கள் அனைத்தும் வீணாகாமல்ப ணமாக்கப்பட்டது.

இவ்வாறு மீன்பிடி அபிவிருத்தி வடபகுதி மீனவர்களின் வாழ்நிலையை உயர்த்தியது. 1983 இல்வடபகுதியின் அதிஉச்ச மீன்பிடி காரணமாக நாட்டின் 40 சதவீதத்திற்கும் அதிகமான மீன் உணவுத் தேவையை வடபகுதி மீனவர்களே பூர்த்தி செய்தனர். அக்காலத்தில் இலங்கையில் இருந்த மீன்பிடி தொழிலாளர்களில் 15 சதவீதமானமீனவர்கள் இந்த சாதனையை செய்தனர்என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

12ம் பக்கம்....

**முள்ளிவாய்க்காலின் தோல்வியும்,**

போட்டால்சரி,தாம் காட்டும்

அமெரிக்காவை நம்பினால் சரி..,என்று மக்களை இதிலிருந்து அன்னியப்படுத்தும் குறுந்தேசியம் தான் தொடருகின்றது.

இதைத்தவிர எதையும் செய்யமுடியாது என்ற அவநம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி, வாக்குப் போடக் கோருகின்றது. இதன் மூலம் மேற்கு நாடுகளும், இந்தியாவும்..,எங்களை மீட்கும் எனக்கூறி, தாம் மீட்பாளராகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஊட்டும் அரசியல் தான் காணப்படுகின்றது. இது தான் 60 வருடமாக தமிழ் மக்களை, மீண்டும் மீண்டும் தோற்கடித்த அரசியல்.

மக்கள் தமக்காக தாம் போராட முடியாதா? காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தம் உறவுகளைத் தேடி நடத்தும் போராட்டம், மீனவர்கள் நடத்தும் போராட்டம், சம்பூர் மக்களின் நிலப் போராட்டம்..,என்பன இதில் இருந்து வேறுபட்டவை. மக்கள் தாங்கள் வாழ்வதற்காக தம் சொந்தப் பலத்தில் நம்பிக்கை கொண்டு எப்படிப் போராடுகின்றனரோ, அப்படித்தான் அனைத்துக்காகவும் மக்கள் போராட வேண்டும்.

மக்கள் தமக்காகத் தாமே போராடவேண்டும். தங்கள் நியாயமான உரிமைகளைப் பற்றி சிங்கள மக்களுடன் பேசுவதன் மூலம் சேர்ந்து போராடவேண்டும். பேரினவாத அரசுவேறு சிங்கள மக்கள்வேறு என்பதை மறுத்த எமது கடந்தகாலத் தவறைத் திருத்தி, அரசுக்கு எதிராக ஒன்றிணைந்து எம் உரிமையை வென்று எடுக்கவேண்டும். தமிழ் மக்களை ஒடுக்குவது நியாயம் என்று, சிங்கள மக்களிடம் அரசு தொடர்ந்து கூறுவதை அனுமதிக்க முடியாது. நாம் சிங்கள மக்களுடன் சேர்ந்து அரசுக்கு எதிராக இணைந்து போராடும் வண்ணம், நாம் போராடவேண்டும்.

குறுகிய தேசியவாதத்தை, குறுகிய இனவாதத்தைக் களையவேண்டும். அது தமிழ் மக்களை மற்றைய இன மக்களுடன் சேர்ந்து அரசுக்கு எதிராக அணிதிரள்வதை தடுத்திருக்கின்றது. பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்வதை, மற்றைய இனங்களுக்கு எதிராகச் செய்வதன் மூலம், எதிரியைப் பலமாக்கித் தமிழ் மக்களை தனிமைப்படுத்துவதேஇதனால் நடந்தேறும். இதன் மூலம் பேரினவாதத்துக்கு மறைமுகமாக துணைபோபவராகவேநாம் இருப்போம். இந்த வகையில் கடந்தகால சரி பிழைகள் அனைத்தையும் நாம்தெளிவாகப்பேசியாக வேண்டும். தவறுகளையும், குறுந்தேசிய வக்கிரங்களையும் முன்னிறுத்தி, எதிரி தன் இன மக்களிடம் இனவெறுப்பை தூண்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது. இதை எதிர்த்துப் போராடுவதன் மூலந்தான் சரியான மக்கள் போராட்டம் தொடங்குகின்றது.

இதை இன்று யார் செய்யவில்லையோ, சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழமுடியாது என்று எவரெல்லாம் இன்று கூறுகின்றனரோ, அவர்கள் நிச்சயமாக தமிழ்மக்களுடன் கூட சேர்ந்து போராடவும் வாழவும் மறுப்பவர்கள் தான். இதுதான் கடந்தகால உண்மை மட்டுமல்ல, இன்றைய உண்மையும் கூட. தமிழ்மக்களின் சொந்த தப்பபிப்பிராயங்களை நீக்காமல், சிங்களமக்களின் தப்பபிப்பிராயங்களை எம்மால் நீக்க முடியாது. மக்கள் தமக்காக தாம் போராடுவது மட்டும் தான், தோற்கடிக்க முடியாத பாதை. இதை ஒடுக்கவும், அடக்கவும் முடியாது. இதுதான் மனித வரலாறு கூட. சிந்திப்போம். செயற்படுவோம்.

---

03ம் பக்கம்....

**குற்றவியல் விசாரணை**

தலைவரொருவரை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் வங்குரோத்து அரசியல் கட்சியைப் பற்றி இங்கு குறிப்பிடவில்லை. அவர்கள் மக்கள் போராட்டங்களை ஒதுக்கி வைத்து விட்டு ஆளும் வர்க்கத்திற்கு அரசியல் தலைவர்களை நிர்மாணித்துக் கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

ஆகவே, இப்போது தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், மாணவர்கள், ஜனநாயகத்தை விரும்புபவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரின் அனைத்து சக்திகளுக்காகவும் போராட்டத்திற்கான மேடை திறந்தே இருக்கின்றது. ஒட்டுமொத்த போராட்டத்தையும் துண்டாடி, தமது வரையறைகளுக்குப் பொருத்தமான, தமக்கு நெருக்கமானவர்களுக்கு தடையாக இல்லாத ஒரு பக்க போராட்டத்தை நடத்தி வெற்றிபெற முடியாதென்பது மீண்டுமொரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. வீழ்ந்துள்ளார்கள். போராட்டத்தில் பங்கேற்ற சில வழக்குரைஞர்கள் மற்றும் வேறு சக்திகள் குற்றவியல் விசாரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தமது திருப்புமுனைகளை தேடிக்கொண்டிருக்கின்றனர். ஒருபக்க போராட்ட பூமியிலிருந்து பொதுவானதும் ஒன்றிணைந்ததுமான போராட்ட பூமிக்கு மாற வேண்டும். அந்த போராட்ட பூமி பிரதம நீதியரசரின் ஜனநாயகத்தைப் பற்றிய போராட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. ஒட்டு மொத்த ஒடுக்கப்பட்ட மக்களினதும் உரிமைகளுக்கான போராட்ட பூமியாக வேண்டும். அதேபோன்று அது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படக் கூடிய நெருக்கடிக்கு மூலகாரமான நவ தாராளமய முதலாளித்துவத்தின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராடும் போராட்டக் களமாகும். உரிமைகளை வென்றெடுப்பதற்கு மாற்று வழி கிடையாது. எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அதைத் தவிர வேறு வழியும் கிடையாது.

---

11ம் பக்கம்....

**ஊரான் ஊரான்**

என்பார்கள். அவர்களது கலைவடிவங்களின் உயரிய நோக்கம் விடுதலை என்பதாகும்.

அன்றைக்கல்ல இன்றைக்கும் "காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்"இன்றைய உலகமயமாக்கல் பொருளாதாரத்துக்குள் அடிமைப்பட்டு தேசச் செல்வங்கள் கொள்ளையிடப்படுவதை இன்றைக்கும் அழகாக எடுத்துச் சொல்கின்றன இந்த வரிகள்.

ஒரு நடிகன் அல்லது கலைஞன் தன்னுடைய கலைத்திறமையை வெறும் நடிப்புக்காக அல்லது கலைக்காக வெறுமனே விற்றுப் பணமாக்குவதற்கும் தனது கலைப்படைப்புகள் சொல்லும் கருத்துக்களோடு ஒன்றியிருக்காத பல கலைஞர்கள் மத்தியில் மக்களுக்காகவே கலை வடித்து அவற்றையே நிஜவாழ்விலும் வரித்துக்கொண்ட மாபெரும் கலைஞன் தன்னுடைய கலைப்படைப்புக்களை போராடும் கருவியாகவே வெளிப்படுத்திய நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் கேட்கிறார்.

"உங்களுக்குக்கேட்கிறதா? எனக்குச்செவிகொடுப்பவர்களுக்குச்சொல்கிறேன், தயவுசெய்துகேளுங்கள்" "துயரப்படாதீர்கள்" இத்துன்பம், இத்துயரம் பேராசைக்காரர்களால் வந்தது. அதுபனிபோல்நீங்கிவிடும். மனிதகுலம்முன்னேறும்வேகத்தைக்கண்டுஅஞ்சிக்குலைநடுங்கும்அற்பமனிதர்களால்தான்துன்பம்வருகிறது. இனிமனிதர்களுக்குஇடையேஉள்ளகுரோதங்கள்மறைந்துவிடும் சர்வாதிகாரிகள்செத்துவிழுவார்கள். மக்களிடமிருந்துபறிக்கப்பட்டஅதிகாரம்மக்களுக்கேதிரும்பவந்துசேரும். இந்தலட்சியத்துக்காகமக்கள்போரிட்டுப்பலதியாகங்கள்செய்கிறார்கள். அவர்கள்காப்பாற்றித்தரும்விடுதலைஎன்றுமேஅழியாது!.. வீரர்களே! அடிமைவாழ்வுக்காகச்சண்டைபோடுங்கள்! விஞ்ஞானமுமுன்னேற்றமும்மனிதஇனத்தைஉந்தித்தள்ளும்ஒருபுதுஉலகத்துக்காகப்போரிடுவோம்! வீரர்களே, ஜனநாயகத்தின போரால்நாம்ஓரணிசேருவோம்! (நன்றி புதிய ஜனநாயகம் ஏப்ரல் 1989)

"Turn of the lights" என்ற திரைப்படத்தில் அவர் அறைகூவல் மட்டும் விடுக்கவில்லை. அவர் தனது ஊடக நேருரைகளிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தனது முழு வாழ்விலும் மக்களுக்கான ஒரு கலைஞனாக திகழ்கிறார். தமிழ் தென்னிந்திய திரைப்படங்களுக்குள் தலைகளை அடகுவைத்தவர்களுக்கு இது சமர்ப்பணம்.

எங்கள் தேசத்தில் என்றைக்குமே கலை மக்களுக்காகவே என்ற அடி ஆதாரத்தில் நின்று இன மத பேதங்கள் கடந்த மக்களின் சுபீட்சத்தை கலை இலக்கிய களத்தில் நின்று மக்களிடத்தில் எடுத்துச் செல்லும் கலைஞர்களின் போராட்டம் வலுப்பெற்றிருக்கவில்லை. இனப்பிளவுக்கு எதிராகவும், இனஐக்கியத்தையும் கட்டியமைக்கும் கலைஞர்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கவில்லை. மாறாக இனவுணர்வுகளுக்கு ஆகாயப்பந்தலில் ஊஞ்சல் கட்டிய கலைகள் பிரசவித்தன. அதில் கலைஞர்களாக குளிர்காய்ந்தவர்கள் மக்களுக்கெனப் படைத்தவர்களின் குரல்வளையை நெரித்து அடக்கினார்கள்.

நிலமைகளை மாற்றுவோம்.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே ஒருத்தன் வைச்சான் வெள்ளரிக்கா"

---

## சொர்க்கவாதிகளால் சபிக்கப்பட்ட நின்மீதுநரகவரலாறு

அள்ளஅள்ள
அள்ளிக் கொண்டேயிருக்க
ஜீ... பூம்பாச் சுரங்கமல்லவாநீ..!

வெளிநாட்டார் பலரும்
உள்நாட்டார் சிலரும்
அள்ளி அள்ளித் தங்களைச்
சொர்க்கமாக்கிய மண்ணல்லவா நீ..!!

அதனால்த்தான் உன்னைச்
சொற்கபுரி என்கிறார்களோ
மனிதவதைத் திருடர்கள்.

ஆயினும் நின்சொர்க்கத்தில்
எந்தவித நரகமும் இல்லை
என்கிறார்களே சிலர்..?

ஆம்
நீ..! சொர்க்கந்தான்.

ஆயிரம் ஆயிரம்
பல்லாயிரம் உடல்களை - அந்த
உயிர்களின் வதைகளைப் புதைந்த
சொர்க்கந்தான் நீ..!

உலகக் காலனியர்
தினந் தினமாய்க் கன்னமிடும்
எங்களின் நீ..!
சொர்க்கந்தான்.

உலகத்து இயமனுகள் இணைந்து
மனிதமனங்களை
உன்னில்வதமாடியநீ..!
சொர்க்கந்தான்.

அத்தனைவல்லாதிக்கரும்
அள்ளிஅரவணைத்து
பிரித்த இனங்களின் பின்னணியில்
இப்போஎஞ்சி இருப்பது
சாதியப் படிமுறையின் பலுக்கல்களும்
மனிதம்மேல் உரிமையற்றபேதங்களும்
அறிவியலைத் தூசணிக்கும் மதச்சேறும்
அலுக்கோசர் வன்கொடுமைஅரசியலாய்...

இவைநான்கும் இணைந்துநின்று
மானிடத்தைமௌனத்திலேகட்டிவைத்து
சொர்க்கம் சொர்க்கம் சொர்க்கமெனச்
சொல்கின்றசொர்க்கவாதிகளால்
சபிக்கப்பட்ட நின்மீது
நரகவரலாறு.

அவை..,
மறைக்கப்பட்ட கறைகளாகவும்
மறுக்கப்பட்ட குறைகளாகவும்
நின் மௌனத் துயரங்களுள்
நீ..!
மோனித்துக் கிடக்கின்றாய்.

# சவுகத் அலி கொலை முயற்சியை கண்டிப்போம்!

## மக்கள் போராட்ட இயக்கம்



"சண்டே லீடர்" பத்திரிகையின் ஊடகவியலாளர் பரோஸ் சவுகத் அலி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை வன்மையாக கண்டிக்கும் மக்கள் போராட்ட இயக்கம், ஊடக சுதந்திரத்தையும், மனித உரிமைகளையும், ஜனநாயத்தையும் பாதுகாப்பதற்காக அணிதிரள வேண்டுமென மக்களிடம் கேட்டுக்கொள்கிறது என அந்த இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் குமார வெளியிட்டுள்ள அறிக்கையொன்றின் மூலம் கூறப்பட்டுள்ளது.

"2013.02.16ம் திகதி சவுகத் அலி தங்கியிருந்து விடுதிக்குள் நுழைந்த இனந்தெரியாத மூன்றுபேர் அவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனால் படுகாயமடைந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அரசாங்கத்தின் பக்கமே விரல் நீட்டப்படுகிறது. அந்த சந்தேகம் உண்மையானதா இல்லையா என்பது விசாரணை மேற்கொள்ளப்படும் விதத்தைக் கொண்டு நிச்சயிக்கப்படும். அதற்கு முன்னர் சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்க படுகொலை செய்யப்பட்டமை நாடறிந்த விடயமாகும்.

---

**5ம் பக்கம்.... இயற்கை பற்றி**

கொண்ட சிலர் முன்னுதாரணமிக்க வாழ்க்கை அமைப்பதன் மூலம் சமூகத்தை மாற்றிவிட முடியும் என்று நம்பினர்.

இவர்கள் பற்றி எங்கெல்ஸ் கூறும் போது "சான்-சிமோன், ஃபூரியே, ஒருவனுடைய விசித்திரமான கருத்துகளும் கற்பனாவாதமும் எப்படி இருந்தாலும் அவர்கள் எல்லாக் காலங்களையும் சேர்ந்த மிகச்சிறந்த சிந்தனையாளர்களில் முக்கியமானவராக இருக்கிறார்கள்" என்றார். மனித அவலம் பற்றிய அக்கறையுடன், அதை மாற்ற வேண்டும் என்று கனவு கண்டார்கள். இதை எப்படி மாற்றுவது, யார் மாற்றுவது என்பதை மார்க்சியம் சமூக விஞ்ஞனமாக முன்வைக்கின்றது. இதற்கு உறுதுணையாக அடிப்படையாக இருந்தது தான் இயங்கியல், பொருள் முதல் வாதம் மற்றும் பொருளாதாரம் பற்றி அறிவு.

மார்க்சியத்துக்கு முந்தைய இயங்கியல்,பொருள் முதல் வாதம், பொருளாதாரம் பற்றி

ஒரு பொருள் மாறிக்கொண்டு இயங்கிக் கொண்டு இருக்கின்றது என்பதை மறுத்து தான் கருத்துகள், சிந்தனைகள், தத்துவங்கள் முன்வைக்கப்பட்டன. இயக்கத்தையும், மாற்றத்தையும் மறுப்பதைசாரமாக கொண்ட இயங்கியல் மறுப்பாக, மறுதளத்தில் இதுவே கருத்து முதல்வாதமாக இருந்தது.

இந்த வகையில் இயங்கியல் மறுப்பை தத்துவதளத்தில் தகர்த்தவர் கியோர்க் ஹெகல்(1770-1831) ஆவார். கருத்து முதல்வாதத்தை தகர்த்து பொருள்முதல்வாதத்தை முன்வைத்தவர் லுட்விக் ஃபாயர்பாஹ்(1804-1872) ஆவர். இந்த வகையில் மார்க்சிய தத்துவத்தை வளர்தெடுக்க இவர்களின் கோட்பாடுகள் காரணமாக இருந்தபோதும்,அது குறைபாடு கொண்டதாக இருந்தது.

இதற்கு முந்தைய கிரேக்க தத்துவியலாளர்கள், இயற்கையான இயங்கியலாராக இருந்தனர். அரிஸ்டாட்டில் மாபெரும் அறிவுஜீவியாக இருந்தார். இவர் இயங்கியல் கூறுகள் தொடர்பாக ஆராய்ந்து இருந்தார். கிரேக்க தத்துவவியலரான ஹெராக்லிட்ஸ் எல்லாம் இருக்கின்றது அதே நேரத்தில் எல்லாம் இல்லாமலும் இருக்கின்றது. ஏனெனின் ஒவ்வொன்றும் நிலைப்பாடற்றதாய் இருக்கின்றது, தொடர்ந்து மாறிக் கொண்டும், மறைந்து கொண்டும் தோன்றிக் கொண்டு உள்ளது என்றார். ஆனால் அதை அறிவியல் பூர்வமாக நிறுவ முனைந்த போதும், இயற்கையைத் தாண்டி முன்னேறவில்லை. இதன்பின் இயங்கியலை வெளிப்படுத்திய அறிவாளிகளில் டேக்கார்ட், ஸ்பினோஸா இருந்த போதும், சமூக இயக்கம் படிப்படியாக இயக்க மறுப்பியலாகிவிட்டது. இதன் பின் இயங்கவியல் தத்துவதுக்கு வெளியில் காணப்பட்டது. இதை மாற்றி அமைத்தவர் தான் ஹெகல்.

ஹெகல் இயங்கியலை முன்வைத்த போது அதை கருத்துமுதல் வாதம் ஊடாகவே முன்வைத்தார். இதன் மூலம்உலகத்துக்கு வெளியில்,வேறு ஒன்று இருப்பதாக கற்பித்தார். ஃபாயர்பாஹ் பொருள் முதல்வாதத்தை முன்வைத்த போது, இயங்கியலை மறுத்தார். உலகத்தை இயக்கமற்ற ஒன்றாக காட்டினார். வளர்ச்சியை நிராகரித்து, அளவு ரீதியான மற்றத்தை மட்டுமே அங்கீகரித்தார்.இப்படி இருவருடை தத்துவத்தின் குறைபாட்டை கடந்துதான் மார்க்சியம், ஒரு சமூக விஞ்ஞானத் தத்துவமானது.


மார்க்சியத்தை வளர்த்தெடுக்க உதவியது பொருளாதாரம் பற்றி அறிவு.இந்த வகையில் ஆடம் ஸ்மித்(1723-1790), டேவிட் ரிக்கார்டோ(1772-1790) ஆகியோர், உழைப்புதான் அனைத்து செல்வத்தின் தோற்றுவாய் என்பதை நிறுபித்தார்கள். இந்த அடிப்படையைக் கொண்டு தான் மார்க்ஸ் விஞ்ஞான பொருளாரத்தை நிறுவினார். இந்தமுதலாளித்துவ பொருளதாரவாதிகள் பொருட்களின் உறவைக் (பொருளை மாற்றிக் கொள்வது பற்றி) கண்டுபிடிக்க, மார்க்ஸ் மனிதர்களுக்கு இடையிலான உறவைக் கண்டுபிடித்தார். இப்படி மார்க்சியம் சமூக விஞ்ஞனமானது.

மனிதர்களுக்கு இடையிலான உழைப்பின் உறவைக் கண்டு பிடித்தன் மூலம், உபரி மதிப்பு கோட்பாட்டை மார்க்ஸ் கண்டுபிடித்தார். இதுதான் முதலாளித்துவ பொருளாதார கொள்கையில் முக்கிய தூண். இது தான் முதலாளித்துவ பொருளாதார விதிகளை,முரணற்ற வகையில் விளக்கியது.

இப்படி மார்க்சியம் கற்பனையில் தோற்றவில்லை. தனக்கு முந்தைய அறிவையும்,மனித வாழ்வையும், வாழ்வதற்கான மனிதன் நடத்திய போராட்டத்தையும் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு தான், எதார்த்தம் மீது, நடைமுறை மீதுதன்னை சமூக விஞ்ஞானமாகியது. இதைத்தான் எங்கெல்ஸ். "எங்கள் போதனை செயலுக்கு ஒரு வழிகாட்டியே தவிர வரட்டுச் சூத்திரம் அல்ல" என்றார் லெனின் "மார்க்சியம் உயிரற்ற வரட்டு சூத்திரமல்ல... செயலுக்கு உயிருள்ள வழிகாட்டி" என்றார்.

---

**4ம் பக்கம்.... சிங்கள மக்களின்**




முன்னேஸ்வரம் கோவிலுக்குள் அமைச்சரொவரின் தலைமையில் சென்ற குண்டர்கள் ஹிந்து மக்களின் வணக்க வழிபாடுகளுக் இடையூறு விளைவித்தனர்.

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அனைத்து முதலாளித்துவ கட்சிகளும் ஒரு கையில் நவ தாராளமய முதலாளித்துவத்தையும், 4. 4ம் பக்கத்திலிருந்து.....

மறுகையில் சிங்கள பௌத்த இனவாதத்தையும் வைத்துக்கொண்டு தான் ஆட்சிக் கட்டில் ஏறின. சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் முதலாளித்துவவாதிகளால் தூவப்பட்ட மதவாதம் இன்று உச்சத்துக்கு வந்திருப்பதற்கான உதாரணம் தான் தம்புள்ளை பள்ளிவாசல் தாக்கப்பட்டமை. அநுராதபுரம் பள்ளிவாசல் தாக்கப்பட்டமை, தெஹிவலை பிரதேதசத்தில் பள்ளிவாசலுக்குள் நுழைந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடக் கூடாது என்று அச்சுறுத்தியமை, பதுளையில் அரசியல் காரணங்களுக்காக மதவாதத்தை தூ ண்டிவிட்டு அதில் குளிர்காய முயற்சிக்கின்றமை ஜனவரி 19ம் திகதி மஹரகம நகரில் ஃேடுஜஆஜவு என்ற முஸ்லிமுக்கு சொந்தமான நிறுவனத்திற்கு எதிராக பௌத்த பிக்குகள் தலைமையில் நடந்த பாரிய ஆர்ப்பாட்டம் போன்ற சம்பவங்களைக் குறிப்பிடலாம். நாட்டில் சிங்கள மக்கள் எதிர்கொண்டுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் முஸ்லிம்தான் என்று பொது பல சேனா என்ற பௌத்த மதவாத அமைப்பு முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனக் குரோதத்தையும், மதக் குரோதத்தையும் பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால் சிங்கள மக்கள் முகம் கொடுக்கும் பொருளாதார பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் முஸ்லிம்களோ, தமிழர்களோ காரணமல்ல. முஸ்லிம் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தமிழர்களோ சிங்களவர்ளோ காரணமல்ல. அதேபோன்று தமிழர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு சிங்களவர்களோ முஸ்லிம்களோ காரணமல்ல. இவை அனைத்துக்கும் காரணமாக இருப்பது இந்த ஆட்சி முறை. இந்த சமூக அமைப்பு முறை. இந்த முறையை மாற்றியமைக்காத வரை, அடக்குமுறை, ஒடுக்குமுறை, வன்முறை போன்றவற்றிற்கு முகம்கொடுப்பதைத் தவிர வழியில்லை. ஆகவே, இவற்றுக்கு எதிராக சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து இலங்கை மக்களும் இணைந்து இந்த வன்செயல்களுக்கு எதிராக போராட முன்வரவேணடும். இல்லாவிட்டால், இனவாத, மதவாத அரசியல் வாதிகளின் ஆசீர்வாதத்தோடு அரங்கேறி வரும் இப்படியான துவேஷ நடவடிக்கைகளினால் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றப் போகிறார்களோ இல்லையோ. ஆனால் எண்ணெயில் தீ மூட்டப்போது என்னவோ உண்மை.

---

**13ம் பக்கம்.... கொல்ல வரும்**




கொன்றுவிடும். அணுஉலைகளில் தொழில்நுட்பகோளாறுகள் காரணமாகவும், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் பலவிபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. கூடன்குளம் பிரதேசம் பூகம்ப அனர்த்தம் மற்றும் சுனாமி ஆபத்துடைய பிரதேசமாகும். அனர்த்தம் ஏற்படாது என்ற குருட்டு நம்பிக்கையிலேயே அணுஉலைகள் கட்டப்படுகின்றன.1987ம் ஆண்டு ரசியாவின் சேர்னோபில் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த அணுஉலையில் ஏற்பட்டவிபத்தின் காரணமாக 5 லட்சம் மக்கள் மரணத்தை தழுவினார்கள். விபத்து நடந்த இடத்திலிருந்து 5000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் சுவீடன் நாடு கூட சேர்னோபில் அணுஉலைவிபத்தினால் பாதிக்கப்பட்டது.25 வருடங்கள் கடந்தபின்னும் இன்னும் அங்குபாதிப்புக்கள் தொடருகின்றன. சேர்னோபில் அணுஉலைகளை உருவாக்கியரசியாவின் தோல்வியடைந்ததொழில்நுட்ப மே,ரசியாவின் துணையுடன் கூடங்குளத்தில் பயன்படுத்தப்படுகிறது. கடந்த சில வருடங்களுக்கு முன் அணுதொழில்நுட்பவளர்ச்சியின் 14ம் பக்கத்திலிருந்து.....

உச்சத்தில் இருக்கும் ஜப்பான் நாட்டின் புககுசிமாஎன்ற இடத்தில் அமைந்திருந்தஅணுஉலையில் ஏற்ப்பட்டவிபத்தின் காரணமாக------பேர்மரணித்தார்கள்.80000பேர் புற்றுநோய்க்குஆளானார்கள். நவீனதொழில்நுட்பத்திற்கே இந்தநிலைஎன்றால் 30 வருடம் பழமையானதோல்வி யடைந்ததொழில்நுட்பம் தலைமாட்டில் அணுகுண்டைவைத்திருப்பதிற்குசமமானது. மேலும் புககுசிமாஅணு உலை விபத்தின் பின் ஒன்றறைவருடங்கள் கடந்துஅவ்விடத்திலிருந்து 750 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்தவயல்களில் விளைந்தநெற்களில் கூட கதிர்வீச்சுகாணப்பட்டது. கூடன்குளத்திலிருந்து முழு இலங்கையும் 450 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ளடங்கிவிடுகிறது. ஆகவேஅணுஉலையில் சிறுவிபத்துஏற்பட்டாலும் அதன் நேரடிதாக்கத்திற்குநாம் ஆளாகநேரிடும். அணுஉலைகளில் இதுவரைவெடிப்புக்கள் நிகழ்ந்ததில்லை. வெடி ப்புஎன்பதுஅணுகுண்டுவெடிப்பதற்குசமனானதாகும். வெடிப்புநிழ்ந்தால் இலங்கையில் புல் பூண்டுகள் கூட எஞ்சாது.

கூடன்குளம் அணுஉலைகள் எமக்குபெறும் ஆபத்தைதோற்றுவித்துள்ளபோதும், இலங்கைஅரசாங்கமோஎதிர்ப்பைதெரிவிக்காமல்,அணுஉலைகளினால் பாதிப்பேதும் ஏற்பட்டால் அதற்கானநட்டயீட்டைபெறபேச்சுவார்த்தைநடத்திக் கொண்டிருக்கிறது. எனவே,மக்கள் நலன் சார்ந்தியங்காதமுதலாளித்துவஅர சைநம்பிஏமாறாமல்,ஒட்டுமொத்த இலங்கையரும் அணிதிரண்டு கூடன்குளம் அணுஉலையைஎதிர்த்திடவேண்டும். இனியும் அரசபடைகளின் துப்பாக்கிரவைகளிற குஅஞ்சிஅடங்கியிருப்பதில் பயனில்லை,கண்ணுக்குதெரியாதகதிர்வீச்சுஎம்மைகொல் லபோகின்றன. இதை இப்போதேதடுத்திடாவிட்டால் எப்போதுமேதடுத்திடமுடியாது !

# போராட்டம்

400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல, கோட்டே
தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com
http://www.peoplesstruggle.com


## இலங்கையில் ஜனநாயகத்தை நேசிப்பதும், மனிதவுரிமையைக் கோருவதும் குற்றமா?

சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தில் லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் அரச கூலிப் படைகளால் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர். அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென குரல்கொடுக்கின்ற நிலையில். அவர்கள் இருவரின் விடுதலைக்காக நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்படும் அனைத்து போராட்டங்களுக்கும், சகல மனித உரிமை செயற்பாட்டாளர்களும் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்ற சந்தர்பத்தில்.

யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரான லலித்குமார் வீரராஜ் மற்றும் அவருடன் சென்ற குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் காணாமல் போனது, அரச பாசிசத்தின் அப்பட்டமான மற்றொரு வெளிப்பாடாகும். இதுவரை காலமும் அரச படைகளும் அவர்களின் எடுபிடிகளான தமிழ் துரோகக் குழுக்களும் வடக்கு மற்றும் கிழக்கில் தமது பாசிசக்கரங்கள் மூலம் தமிழ் மக்களின் கழுத்தை நெரித்தே வந்தனர். இதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தையும், அரச இயந்திரத்துக்கு எதிரான எழுச்சியையும் தடுத்து வந்தனர்.

2009 இல் மாபெரும் இனவழிப்பு யுத்தம் முடிவுக்கு வந்த பின், ஆயுதம் எதுவுமின்றி மக்கள் நலம் சார்ந்து தமது பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமையை முன்னிறுத்தி, ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட முயன்ற பல நூறு ஊடகவியலாளர்கள், சமூகநல போராளிகள், இடதுசாரிகள், அரசியல் விமர்சகர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர். அல்லது பாசிச அரசினால் கொலை செய்யப்பப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் தமிழர்களாகவே இருந்தனர்.

சிங்கள மக்களை ஒடுக்கும் காட்சிகள், யுத்தத்தின் பின்னான வெற்றிக் கொண்டாட்டங்கள் ஊடாக இலங்கையில் மீண்டும் அரங்கேறுகின்றது. தமிழ் குறுந்தேசியம் இராணுவம் பற்றியும், அரசு பற்றியும் கூறிவந்த இனவாத கூற்றுகள் அனைத்தும் இன்று பொய்யாகின்றது.

இலங்கையில் இன்றைய யதார்த்தம் இதுதான். இதை மறுப்பதும், கண்டுகொள்ளாது இருப்பதும் பொய்மையான அரசியல் மட்டுமின்றி, இதற்கு துணை போவதாகவே அமையும். காணாமல் போனவர்களுக்காக போராடியவர்கள் கூட இன்று காணாமல் போகின்றனர். இந்த யதார்த்தத்தைத் தாண்டிய ஜனநாயகம்,சுதந்திரம் என்பது எல்லாம், இந்தச் சூழலை மூடிமறைப்பதற்கான வெற்று வார்த்தைகளே!

இலங்கையில் அனைத்துச் சட்டபூர்வமான செயற்பாடுகளையும் முடக்கிவரும் இன்றைய நிலையில், சாதாரண மனிதவுரிமை செயற்பாடுகளை முன்னெடுப்பது கூட, மரணத்துக்குள்ளான வாழ்வாக மாறியிருக்கின்றது.

இனவழிப்பின் போது காணாமல் போன தமிழர்களுக்காக போராடும் சிங்களவர்களும் இன்று காணாமல் போகத் தொடங்கியுள்ளனர். இப்படி மீண்டும் காணாமல் போதல் மற்றொரு புதிய பரிணாமம் தான். தமிழன், சிங்களவன் என்ற இன வேறுபாட்டுடன் மக்களைப் பிரித்து மோதவிடுவதையே விரும்புகின்ற தமிழ்-சிங்கள் இனவாதிகள் மத்தியில், இன ஐக்கியத்துடன் முன்னின்று போராடுவர்களை குறிவைத்து அவர்களை அழித்தொழிப்பது தொடங்கியுள்ளது.

சரணடைந்தவர்களை, விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டு, இனம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டவர்கள் என்று பல ஆயிரம் தமிழர்கள் கடந்தகாலத்தில் காணாமல் போயிருக்கின்றனர். இவர்களை தேடும் உறவினர்களின் போராட்டத்தை ஒடுக்குவதும், மீறிப் போராடுபவர்களை அழித்தொழிப்பதையும் அரச பயங்கரவாதம் முடுக்கிவிட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி இராணுவத்தை நிறுத்தியுள்ள அரசு, சாதாரண பொது நிகழ்வுகளில் கூட தலையிடும் நிலையில் தான், போராடுபவர்கள் காணாமல் போனார்கள். இப்படி காணாமல் போனவர்கள் இராணுவ முகாம்களில் உள்ள சட்டவிரோதமான சித்திரவதைக் கூடங்களில் வைத்து அவர்களின் தலைவிதி தீர்மானிக்கப்படுகின்றது.

அரச பயங்கரவாதச் சூழலில், மக்கள் நடைப்பிணமாக வாழ்கின்றனர். தொடரும் தங்கள் மனிதவுரிமைக் குற்றங்களை மூடிமறைப்பதற்காக தேர்ந்தெடுத்துள்ள பாதை, போராடுபவர்களை இல்லாதொழிப்பதாகும். இன, மத, வேறுபாடின்றி அரசுக்கெதிரான விமர்சனங்களை முன்வைப்போரை, இலங்கையின் அரசியல் அரங்கத்தில் இருந்து நீக்க அனைத்து வழிகளையும் கையாளுகிறது இலங்கை அரச பாசிசம்.

அரச பாசிசத்தின் கொடுமைகளை பல தடவைகளை அனுபவித்த எமது சகோதர இனம், மறுபடியும் இலங்கை அரசின் கொடுங்கோன்மையை அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. இதன் தொடக்கமாக, கடந்த வருடம் ஆனி மாதம் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் உரிமைக்காக போராடிய தொழிலாளி றொசேன் சானுக்கவின் படுகொலை, பெரும்பான்மையின உழைக்கும் வர்க்க சகோதரர்களுக்கு எதிரான அபாய அறிவிப்பாக அமைந்தது. றொசேன் சானுக்கவின் கொலைக்கு பின்னான போராட்டம், சிங்கள மக்களை மட்டுமல்ல இலங்கை வாழ் மக்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை காலமும் இராணுவம் என்றால் அது புலிகளையை ஒடுக்கும் சிங்கள தேசபக்தர்கள் என்று நம்பவைத்தது போலல்ல என்பதை சிங்கள மக்கள் தங்கள் சொந்த நடைமுறை மூலம் உணருகின்றனர். இதை அவர்கள் தங்கள் சொந்த அனுபவம் மூலம் தான் உணர்ந்தனரே ஒழிய, குறுந்தமிழ் தேசியம் இதை அவர்களுக்கு விளக்கியிருக்கவில்லை. மறுபக்கத்தில் தமிழ் குறுந்தேசியம் சார்ந்து தமிழ் மக்கள் நம்பியது போல், இது சிங்கள இராணுவமல்ல என்பதை அந்த மக்கள் போராடித்தான் தமிழ் மக்களுக்கு நிறுவிக் காட்டுகின்றனர்.

குறுந் தமிழ்தேசியம் அந்தளவுக்கு தமிழ் மக்களை மந்தையாக்கி வைத்துள்ளது. தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்குகின்ற இராணுவம், அனைத்து மாயையையும் களைந்திருக்கின்றது.எனலாம்.

# கடந்த மாத நிகழ்வுகளின் தொகுப்பு




முஸ்லிம்களுக்கு எதிராக அரச ஆதரவுடன் சில அமைப்புக்களினால் திட்டமிட்டு மேற்கோள்ளப்படும் இனவாத போலி பிரச்சாரங்களுக்கு எதிராக மக்களை தெளிவுபடுத்தும் வகையில் கடந்த 31ம் திகதி கொழும்பு புறக்கோட்டை பகுதியில் சம உரிமை இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபடுகின்றமை படங்களில் காணலாம்.

ரிசானா நபீகிற்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமையை கண்டித்து சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பினால் 2013.01.10 அன்று மேற்கொள்ளப்பட்ட ஆர்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படங்கள்.






சம உரிமை இயக்கத்தின் சுவிஸ் கிளை சூரிச் நகரில் கடந்த டிசம்பர் மாதம் 2013.01.26 அன்று நிறுவப்பட்டது. அதன் நிர்வாக குழு மற்றும் அதிகாரிகள் இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந் நிகழ்வில் முன்னிலை சோசலிச கட்சியின் மத்திய குழு உறுப்பினர் குமார் குணரத்தனம் மற்றும் புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இராயகரன் உட்பட மற்றும் பல செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்தை படங்களில் காணலாம்.




அரச ஆதரவுடன் சில இனவாத அமைப்புக்களினால் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கோள்ளப்படும் இனவாத போலி பிரச்சாரங்களுக்கு எதிராக மக்களை தெளிவுபடுத்துவதற்காக ˙சம உரிமை இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் கலந்துரையாடலில் ஈடுபடுகின்றமை படங்களில் காணலாம்.


கோட்டே, மாதிவெல, தலவத்துகொட பாதை, இலக்கம் 400/2ல் வசிக்கும் ஜூட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.